சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5 | இதழ்: 04 | செப்டம்பர் - 2023 | விலை - ரூ.15/-

VOL:5 | ISSUE: 04 | SEPTEMBER - 2023 | Rs. 15/-



"மகா அவதாரி" பாபாஜி!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-5 மலர்-04 செப்டம்பர் - 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு

சிகரம் பரிஸிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



உன்னை தவிக்க விட்டு விட்டு நான் எங்கே போவேன், உன் வலிகளை நான் உணராமல் இருப்பேனா, அல்லது நீ கூறினால்தான் எனக்கு தெரியுமா? சற்று யோசித்து பார். நீ வளர்ந்த பிள்ளையாய் இருக்கலாம் ஆனால் என்னுடைய பாதுகாப்பில் தான் இன்றும் என்றும் இருக்கிறாய் என்பதை உணர்ந்து கொள்.

அதையும் மீறி வாழக்கையில் கஷ்டத்தை உணர்கிறாய் என்றால் என்ன அர்த்தம், நீ வாழ்வில் உயர நீயே சுயமாக முடிவு எடுக்கும் பக்குவம் வர வேண்டும். நீ நன்றாக நீச்சல் அடிக்க வேண்டும் என்றுதான் தண்ணீரில் தள்ளி விட்டு அருகிலேயே நின்று வேடிக்கை பார்க்கிறேன்.

இன்று நீச்சல் ஒரளவிற்கு தெரிந்து விட்டது. இனி மேலும் உன் அருகில் நான் இருந்தால் எல்லாவற்றையும் என் சாய் அப்பா செய்வார் என்று சும்மா இருப்பாய். உன் வாழ்க்கை முழுக்க நிறைய மக்களை நீ சந்திக்க இருக்கிறாய். அத்தனை பேரும் ஒன்று போலவே இருக்கமாட்டார்கள்.

அதனால் தான் சம்சார ஆற்றில் உன்னை இறக்கி விட்டு, துன்பத்தின் மூலம் உனக்கு அனுபவத்தை உணர்த்த அருகில் இருந்து அமைதியாய் கவனிக்கிறேன்.

இது உன் நல்லத்திற்கே, உன்னை உயிராய் நினைக்கும் உன் சாய் அப்பா எப்படி உன்னை விட்டு செல்வேன். உன்னை விட்டு நான் எப்போதும் விலக மாட்டேன். என்றும் என் அரவணைப்பில் ஆனந்தமாய் வாழ்வாய் இது என் சத்திய வாக்கு.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் அறுபத்து இரண்டாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழ் ஆறாம் ஆண்டு துவக்க விழாவாகவும், அறுபத்து ஒன்றாவது இதழ் வெளியீட்டு விழாவாகவும், சாயி சேவகர்களுக்கு விருது வழங்கும் விழாவாகவும், ஆக முப்பெரும் விழாவாக 13.08.2023 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு டி.நகர் காந்திமதி திருமண மண்டபத்தில் மிக கோலாகலமாக நடைபெற்றது.

சீரடிவாசி "வாழும் பாபா" ஸ்ரீ அச்சுதானந்தா சுவாமிகள் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி துவக்கி வைத்தார்கள். காலை 9 மணிக்கு செல்வி. அமிர்தா, செல்வி. அட்சயா ஆகியோர் இறைவணக்கம் பாட இனிதே துவங்கியது ஆண்டு விழா.

அதைத்தொடர்ந்து, பரதநாட்டியம், குழந்தைகளுக்கு ஓவியப்போட்டி, ஓம் சாய்ராம் எழுதும் போட்டியும் நடைபெற்றது. தொடர்ந்து இம்மாத புத்தகம் வெளியீட்டு நிகழ்ச்சி

தொடங்கியது. இம்மாத இதழை ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள் அவர்கள் வெளியிட, "மவுன யோகி" ஸ்ரீ தாயம்மா அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் ஏராளமான சாயி சேவா தொண்டர்களும், பொதுமக்களும் திராளாக கலந்து கொண்டு சிறப்பித் தனர். விழா மாலை 4 மணிவரை தொடர்ந்தது. விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் அனை வருக்கும் காலையிலும், மதிய மும் சுவையான அன்னதானம் வழங்கப்பட்டது.

ஆண்டு விழாவிற்காக உதவி செய்த அனைத்து சாய் பக்தர்க ளுக்கும், அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது நெஞ் சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். (ஆண்டுவிழா கட்டுரை விரிவாக உள்ளே தரப்பட்டுள்ளது)

மேலும் நமது இதழுக்கு திருச்சி ராஜா அவர்கள் ஆயுள் சந்தா ஒருவரையும், மூன்று வருட சந்தா இருவரையும், குற்றாலம் சாய் விக்னேஷ் அவர்கள் மூன்று வருட சந்தா இருவரையும், இணைத்து சாயி சேவை புரிந்துள்ளனர். அவர்களும், அவர்களது குடும்பத்தார் அனைவரும் நீள் ஆயுள், நிறை செல்வம், வான்புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக்கின்றோம்.

சமீபகாலங்களில் வலைத்தளங்க ளில் சீரடி சாயிபாபாவைப்பற்றி சில



எதிர்ப்பு கருத்துக்களை ஒரு சிலர் பரப்பி வருகின்றனர். நெடுஞ் சாலைகள் தோறும் பத்து கிலோ மீட்டருக்கு ஒரு பாபா ஆலயம் கட்டப்பட்டிருக்கின்றது. வடநாட்டு சாய்பாபா வாழ்கிறார். தென் நாட்டு முனீஸ்வரன் தேய்கிறார். என்றெல்லாம் பதிவிட்டுக் கொண்டி ருக்கின்றார்கள்.

ஒன்றே குலம்! ஒன்றே தேவன்! யாதும் ஊரே யாவரும் கேளிர், தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! என்ற சத்திய வரிகளுக்கு விளக்கம் புரியா விட்டில் பூச்சிகள். "குருவருள் இன்றி திருவருள் இல்லை" என்ற எளிய ஆன்மீக வழி அறியா தலைக்கணங்கள்.



இவர்களுக்கு பதில் கூறிக் கொண்டு நமது பொன்னான காலத்தினை விரயம் செய்யாது. மேலும், மேலும் பாபாவின் புகழைப் பரப்ப நாம் அயராது உழைக்க வேண்டும். எனவே நமது பகவான் சாயிநாதரின் வாக்காகிய "எதைப்பிடித்தாலும் இறுக்கிப்பிடி" என்பதை நன்குணர்ந்து சாயி தேவனின் வழியில் நடப்போம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக உயிரினங்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத் துடனும்,நிம்மதியுடனும் வாழ வேண்டும் என பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம்.வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்



ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜயம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

"மகா அவதார்" பாபாஜி



பல லட்சக்கணக்கானவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய நூல் 'ஒரு யோகியின் சுயசரிதம்.' பரமஹம்ஸ் யோகானந்தரின் இந்த நூல் மகான்கள் பலரின் மகிமைகளையும் இந்திய யோகக் கலை மரபு பற்றிய ஒரு பெரிய வெளிச்சத்தையும் தந்தது. இந்த நூலின் மூலம் கிரியா யோகா பற்றியும், மகா அவதார் பாபாஜி பற்றியும் அறிந்துகொண்டவர்கள் பலர்.

மகா அவதார் பாபாஜி லாஹிரி மஹாசாயருக்கு கிரியா யோகம் கற்றுக்கொடுத்தார். லாஹிரி மகாசாயர் பல்வேறு மகான்களுக்கு அதைப் பயிற்றுவித்தார். அவர்க ளில் ஒருவர் யுக்தேஸ்வர். ஸ்ரீ யுக்தேஸ் வரின் சீடர்தான் பரமஹம்ஸ யோகானந்தர். யுக்தேஸ்வரின் மூலம் மகாஅவதார் பாபாஜி முதலிய கிரியா யோகா குருமார்கள் பற்றி அறிந்து கொண்டார் யோகானந்தர்.

அந்த நூலில் அவர் பாபாஜியைப் பற்றிக்குறிப்பிடும்போது, "பாபாஜி கிறிஸ்துவுடன் தொடர்புள்ளவர். அவர்களிருவரும் சேர்ந்து மீட்பளிக் கும் எண்ண அதிர்வுகளை அனுப்பியவண் ணம் உள்ளனர்" என்று குறிப்பிடுகிறார். இத்தகைய சிறப்புகள் உடைய பாபாஜி யார் என்று பலரும் தேட ஆரம்பித்தனர்.

நாகராஜ் என்கிற பாபாஜி

பாபாஜியின் சிறப்புகளை அறிந்து தேடத் தொடங்கியவர்களுக்கு பதிலாகக் கிடைத்தது அவரின் பூர்விகம். பாபாஜி தமிழகத்தின் கடலூருக்கும், சிதம்பரத்திற்கும் மத்தியில் உள்ள கடலோர கிராமமான பரங்கிப்பேட்டையில் பிறந்தார். கார்த்திகை மாதம் ரோகிணி நட்சத்திர நாளில் அவரின் ஜனனம் நிகழ்ந்தது. பெற்றோர் அவருக்கு நாகராஜ் என்று பெயர் சூட்டினர்.

நாகராஜின் பெற்றோருக்கு பூர்வீகம் கேரளா. பரங்கிப்பேட்டையில் உள்ள சிவன் கோவிலுக்கு பூஜை செய்ய கேரளாவில் இருந்து இங்கு வந்தனர். பிற்காலத்தில் சிவன் கோவில் முருகன் கோவிலாக மாற்றப்பட்டு முத்துக்குமாரசுவாமி கோவில் என்று பெயர் பெற்றது.

அப்பழமையான ஆலயம் இன்றும் பரங்கிப்பேட்டையில் உள்ளது. இக்கோவிலுக்கும் இலங்கையில் உள்ள கதிர்காமம் ஆலயத்திற்கும் தொடர்பு இருந்தது. இலங்கையில் இருந்து சந்நியாசிகள் பரங்கிப்பேட்டைக்கு வரும்போது அவர்களுடன் நாகராஜ் சிறுவயதில் இருந்தே பழக ஆரம்பித்தார்.

ஒரு கட்டத்தில் சாதுக்களின் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டு யோகம் பயில ஆரம்பித்தார். தமிழக சித்தர் மரபின் ஆதி குருவான அகஸ்தியரை தரிசனம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அவரை தரிசிக்க இலங்கை கதிர்காமத்துக்குச் சென்று தவம் செய்தார். அங்கே அவருக்கு அகஸ்தியரின் சீடரான போகநாதரின் தரிசனம் கிடைத்தது.

போகரிடம் யோகம் பயின்று கதிர்காம முருகனின் தரிசனத்தைப் பெற்றார் என்கிறார்கள் ஞானிகள். பின்பு அகஸ்தியரை தரிசனம் செய்யும் தன் ஆவலை போகரிடம் தெரிவிக்க அவர் பொதிகை மலைக்குச் சென்று தவம் செய்யச் சொன்னார். அவ்வாறே பாபாஜியும் செய்ய அகத்தியர் மனம் மகிழ்ந்து பாபாஜிக்குக் காட்சி கொடுத்து கிரியாயோகாவினை உபதேசம் செய்தார்.

அதன்பின் பாபாஜி இமயமலை சென்று கடும் யோகப் பயிற்சிகள் செய்து சிரஞ்சிவி ஆகும் வல்லமை பெற்றார். தாம் கற்ற யோகம் இந்த உலக நன்மைக்குப் பயன்பட வேண்டும் என்று காலம்தோறும் ஞானிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அதைக் கற்றுக்கொடுத்து வருகிறார் பாபாஜி என்கின்றனர் கிரியா யோகா பயிலும் யோகிகள்.

பாபாஜி உபதேசித்த க்ரியா யோகா

கிரியா யோகம் என்பது முழு விழிப்புணர்வோடு செய்யப்படும் செயல் என்கிறார்கள். இது நம்மை அறியும் வழி. ஆசனங்கள், பிராணாயாமம், தியானம், மற்றும் மந்திரம் என மொத்தம் 144 வகைப் பயிற்சியின் கலவையே பாபாஜியின் கிரியா யோகம்.

இந்தப் பயிற்சிகளை முழு விழிப்புணர்வுடன் செய்யும்போது அனைத்தும் ஒருங்கிணைக்கப் படுகின்றன. முறையான இந்தப் பயிற்சியின் மூலம் மனிதர்கள் விழிப்படைந்த அதாவது தம்மை உணர்ந்த விழிப்படைந்த மனிதர்களாக மாறிவிடுவர்.

கிரியா யோகாவின் 5 வித மான பயிற்சிகளை பாபாஜி தன் சீடர்களுக்கு உபதேசித்தார். இவை உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும்



ரிஷிகேஷ் ஆஸ்ரமத்தில் உள்ள பாபாஜி படம்

கட்டுப்படுத்தும் தன்மை கொண்டவை. இந்த பயிற்சிகளை கிரியா ஹத யோகம், கிரியா குண்டலினி பிராணாயாமம், கிரியா தியான யோகம், ககரியா மந்திர யோகம், கிரியா பக்தி யோகம் என 5 கிளைகளாகப் பிரித்துப் போதிக்கிறார்கள் யோகாசிரியர்கள்.

குருவின் மகாமந்திரம்

பாபாஜியின் பக்தர்கள், 'ஓம் கிரியா பாபாஜி நம ஓளம்' என்னும் அவரின் மகாமந்திரத்தைச் சொல்லி தியானிக்கிறார்கள். இதில் ஓம் பிரணவம். கிரியா என்றால் முழு விழிப்புணர்வோடு செய்யப்படும் செயல். பாபாஜி என்பது குருவின் திருநாமம், நம என்றால் வணங்குதல். ஓளம் என்பது நம் அகத்தினுள் ஒத்ததிரும் பிரணவ ஒலி.

இம்மந்திரத்தைத் தொடர்ந்து செபிப்பதன் மூலம் நமது உச்சஞ் தலையில் அமைந்திருக்கும் சஹஸ்ர நாம சக்கரத்தில் மூலம் பேரறி வாற்றலைத் தொடர்பு கொள்ளலாம். ஆற்றல் வாய்ந்த இம்மந்திரத்தினை குரு மூலம் பெரும் சீடன் அந்த சக்தியைப் பெறுகிறான்.

மகா சக்தி ரூபனான மகா அவதார் பாபாஜியின் பெயரை ஒருமுறை உச்சரித்தாலே அவரது ஆன்மீக சக்தி நமக்குள் பாய்வது போல் இருக்கும். பாபாஜி அதிகம் மவுனமாகவே இருப்பார். அவரது மொழியே மவுனம். மவுனத்தினால் ஏற்படும் அதிர்வலைகள் அற்புதமானது. அதனால்தான் பலரால் மவுனவிரதம் கடைபிடிக்கப்படுகின்றது.

பாபாஜி தம் பார்வையாலேயே நமக்கு சொல்ல வேண்டியதை சொல்லிவிடுவார். மவுனத்தின் வலிமை அதீதமானது என்பதை அவர் வலியுறுத்துவார். மவுனத்தின் முலமாகத்தான் தியானம் பிறக்கின்றது. அன்பு தோன்றுகின்றது. கருணை பிறக்கிறது.



அதிகம் பேசுவது ஆபத்தில்தான் முடியும். பேச்சு பிரச்சனைகளை உருவாக்கத்தான் உதவும். அளவோடு பேசினால் அது நம்மை உணர்வதற்கு வழிவகுக்கும். நமக்குள் உறையும் இறைவனை அறிய அது ஒன்றுதான் உன்னதமான வழி.

கிரியா என்ற அற்புதமான தியானத்திற்குண்டான திறவுகோலை மனித குலத்திற்கு அளித்த மகா அவதார் பாபாஜி காட்டும் வழியை கடைபிடிப்போம். பாபாஜி காலத்தால் கட்டுப்படுத்த முடியாதவர். இயற்கைக்கும், இதிகாசத்திற்கும், நமது கற்பனைக்கும் அப்பாற்பட்டவர். எனவே அவரை பரிபூரணமாக சரணடைவோம்.

திருவருள் தேடி – 3

ஓம் சாய்ராம். வணக்கத்துடன் உங்கள் சுந்தர்சாயி " திருவருள் தேடி" என்ற தொடரில் சிலக்கூர் " விசா பாலாஜி" சன்னதியில் அமர்ந்து வேலை கிடைக்க வேண்டி பிரார்த்தனை செய்த தருணம், அக்கோவிலின் பிரதார அர்ச்சகர் வெளியே வந்து, என்னிடம் வரும் வெள்ளிக்கிழமை உன் மனைவியுடன் வந்து அபிசேகம் செய்து தரிசிக்க வேண்டும் என்று என்னை வலியுறுத்தினார்.

நானும் அதை மனமகிழ்வுடன் ஒப்புக் கொண்டு அந்த நல்ல தருணத்திற்காக காத்திருந்தேன். அந்த நல்ல நேரமும் வந்தது. ஒரு வெள்ளிக்கிழமை நானும் என் மனை வியும் கோவிலுக்குச் சென்றோம். எங்களைப் பார்த்ததும் அர்ச்சகர் எங்களின் கைகளில் வார்கோல் ஒன்றைக்கொடுத்து, சன்னதியின் முன் பெருக்கி சுத்தம் செய்யக்கூறி சேவை செய்ய வழிகாட்டினார்.

நாங்களும் சந்தோசமாக அந்த சேவையை பணிவுடன் செய்து முடித்து, அபிசேகம், தரிசனம் செய்து முடித்து, பிரசாதம் பெற்றுக்கொண்டு வெளியே வந்தோம். அப்போது அர்ச்சகர் எங்கள் இருவரையும் மீண்டும் அழைத்தார். நாங்கள் அருகில் சென் றதும் ஒருவித பரவச நிலையில் "நான் யாருன்னு தெரியுதா"? என்றார். நான் மிரட்சியும்



– சுந்தர்சாய்




ஆச்சர்யமும் கலந்த குரலில் ஸ்வாமி என்றேன். அவர் உடனே இன்றிலிருந்து உன் நிலமை மாறப்போகிறது. உன் வாழ்க்கையில் ஏற்றம் எதிர்பாராத விதத்தில் அமையப் போகிறது.

உனக்கு அமையப்போகிற உத்யோகம் அதை நிகழ்த் தப்போகிறது. என்று வித்தி யாசமான குரல்மூலம் தெரி வித்தார். பின்பு இயல்பு நிலைக்கு வந்தவுடன் எனது குறுந்தாடியை எடுத் துவிட்டு வந்து மீண்டும் சுவாமி தரிசனம் செய்யச் கூறினார். அத்துடன் எனது கோரிக் கையை விசா பாலாஜியிடம் மீண்டும் ஒரு முறை மனமுருக பிரார்த்தனை செய்து கொண்டு பதினோரு

முறை ஆலயத்தை வலம் வரச்சொன்னார்.

அவர் அறிவுறுத்தியபடி தரிசனம் செய்துவிட்டு நாங்கள் இல்லம் திரும்பினோம். என் மனதில் என்னையும் அறியாமல் அவருடைய அந்த ஆச்சர்யமூட்டும் "நான் யாருன்னு தெரியுதா" என்ற குரல் திரும்பத் திரும்ப எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்க, நானும் என் மனைவியும் அவர் ஏன் அப்படி கேட்டார் என்று தவிப்புடன் அந்த கேள்விக்கு விடை தெரியாமல் இரு சக்கர வாகனத்தில் வீடு திரும்பினோம்.


சிலக்கூர் விசா பாலாஜி கோவில்

ஆனாலும், எங்கேயோ, ஏதோ ஒரு மாற்றம் நிகழ்வதை மட்டும் மனம் உணர்ந்து கொண்டாலும், விடை தெரியாத தவிப்பு என்னைப் பாடாய் படுத்தியது இன்றளவும் பசுமையாய் நிழலாடுகிறது. வீடு திரும்பியதும் எனது தாயார், எங்கள் வரவை எதிர் நோக்கி தவிப்புடன் இருந்ததைக் கண்டோம்.

வந்ததும் வராததுமாய் எனது தாய் கூறினார். நீ வெளியே சென்றதும் ஒரு கால் வந்தது. ஆங்கிலத்தில் உன்னை இருக்கின்றாரா என்று கேட்டார்கள். எனக்குப் புரிந்தாலும் பதில் சொல்ல தெரியவில்லை. ஆனால் அவர் பேசியதில் இருந்து மும்பையில் இருந்து பேசுகிறார் என்பதும், விசா சம்பந்தமாக மும்பைக்கு எப்போது வர முடியும் என்று கூறச்சொன்னதாக கூறினார்கள்.

நான் யோசிக்க ஆரம்பித்தேன். எனக்கு ஞாபகம் இருக்கும்வரையில், முன்பு ஒருமுறை சில மாதங்களுக்கு முன்பு மும்பையில் ஒரு கம்பெனியில் நேர்முகத் தேர்விற்கு சென்று நான் கேட்ட ஊதியத்தை அவர்கள் ஒப்புக் கொள்ளாத காரணத்தினால் அது வெற்றிபெறவில்லை என்பது மட்டும் நினைவிற்கு வந்தது.

இருந்தாலும் இது இரண்டாவது விடுகதையாக அல்லவா இருக்கிறது. அதுவும் அடுத்தடுத்து. முதலில் அர்ச்சகர் அருள்வந்து தன்னை யார் என்று கேட்டது. இரண்டாவது மும்பையில் இருந்து வந்த கால். மதிய உணவிற்குப் பின்பு சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு எது எப்படி இருந்தாலும் மும்பை கம்பெனிக்கு போன் பண்ணி பேசிவிடுவோம் என்று முடிவெடுத்தேன்.

மும்பை கம்பெனியில் வைஸ் பிரசிடெண்ட் ஆக இருக்கும் "பீர்ஜாடே" என்ற நபருக்கு போன் செய்தேன். அவரும் உடனே ஆர்வத்துடன் எஸ், எஸ், நான் தான் அழைத்தேன்.

உங்கள் தாயாருக்கு ஆங்கிலம் தெரியாத காரணத்தினால் சுருக்கமாக முடித்துக்கொண்டேன் என்றார்,

மேலும், போனமுறை சில தவறான புரிதல்களினால் நீங்கள் வேலையில் சேரமுடியவில்லை. இருந்தாலும் இந்த முறை இது ஒரு வெளிநாடு செல்லும் வாய்ப்பு என்பதால் உங்களுக்கு இது பிடிக்கும் என்று நம்புகிறேன்.

நாம் ஒருமுறை நேரில் பேச வேண்டியிருக்கின்றது. நீங்கள் எப்பொழுது மும்பை வர முடியும் என்று தெரிவித்தால் உங்கள் மும்பை பயணம் மற்றும் தங்கும் வசதிகளை ஏற்பாடு செய்கிறேன் என மிகவும் ஊக்கத்துடன் பேசினார். அந்த உரையாடல் எனக்குள் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது.

உற்சாகத்துடன் என் தாயிடம், மும்பையில் இருந்து எத்தனை மணிக்கு கால் வந்தது என்று கேட்க, அவர் கூறிய நேரத்தில்தான் நாங்கள் சிலக்கூர் பாலாஜி, சாரி, சாரி, விசா பாலாஜி ஆலய அர்ச்சகர் எங்களிடம் பேசிய நேரமும் ஒத்துப் போனது.

ஆம் நண்பர்களே! இறையனுபவம் என்ற திருவருள் எனக்கு அளித்த முதற்கொடை இதுவே, ஆச்சர்யம் அதிசயம் அற்புதம்! சீரடி சாய் சத்சரிதத்தில் வரும் சப்தசிருங்கி தேவியின் பூசாரி தெரி வித்ததுபோல் "தர்சன அனுபவமே" எல்லாவிதமான மனச்சலனங்களையும் நீக்கி சக்தியளிக் கும் என்பதைப் போல, எங்களது குல தெய்வமாய் விளங்கும்

"பாலாஜி" தன் அன்பர்கள் அழைக் கும் பெயரான விசா பாலாஜி என்ற அடை மொழிக்கேற்றபடி முதல் தரிச னமாக அவரது அபிசேகம் கண்டு பதினோரு முறை வலம் வந்து வீடு திரும்பும் முன்னரே என் வீட்டில் என் றென்றும் என் நலம் பேனும் எங்களது வாழும் தெய்வமான " என்னைப் பெற்ற தாய்" மூலம் அளித்த ஆசீர்வாதம் ஒரு பரவசமான ஆச்சர்யம் அல்லவா?

நமது இதழில் வருவதுபோல் எங்கும் சாயி! எதிலும் சாயி! என்பது எவ்வளவு உண்மை என்று உணருங்கள். அதிருக்கட்டும், இந்த "திருவருள்" யார் தேடி வந்தது. இல்லை யாரைத் தேடி வந்தது.

– தொடரும்...

மௌனம்

தன்னுடைய செயலும் வார்த்தைகளும் மட்டும் சரி என்று வாதாடுபவர்கள் மத்தியில் உங்கள் அமைதியை மட்டும் ஆயுதமாக வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் எவ்வாறு பேசக் கற்றுக் கொள்கிறீர்களோ அதேபோல் மௌனத்தையும் கற்றுக் கொள்ளுங்கள். பேச்சு உங்களுக்கு வழிகாட்டலாம் ஆனால் நிறைய சந்தர்ப்பங்களில் மௌனம் உங்களைப் பாதுகாக்கும். மௌனம் சிலருக்கு கோபத்தின் வெளிப்பாடு சிலருக்கோ நிரந்தரமான சுதந்திரம் உங்களைத்தவிர வேறுயாரும் உங்களுக்கு அமைதியைத் தர முடியாது.

மவுனம் திறக்காத ரகசியங்களுக்கோர் சாவிஞ்மவுனம் ஆன்மாவை தரிசிக்க அகண்டதோர் பெருவழிஞ்மவுனம் தெளிந்த நீரோடையாய் முகம் காட்டும் கருவிஞ்மவுனம் ஆன்மீக ரகசியங்களை புரியவைக்கும் மொழிஞ்மவுனம் அதுவே இறையின் மொழி ஆகும்.

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

இம்மாதம் நம் குருவிற்கும் அவரது நண்பருமான சாயி சேவகர் திரு.மாதவராஜுக்கும் சீரடியில் நிகழ்ந்த சாயி லீலையை காண்போம் வாருங்கள்.

பகவான் சாயிநாதரின் 100 வது சமாதி தினத்தை ஒட்டி 200 நபர்கள் சீரடி புனித யாத்திரை மேற் கொண்டனர். அதில் நமது குருவும், மாதவராஜ் அவர்களும் கலந்து கொண்டு சீரடி சென்றிருந்தனர்.

சீரடியில் இருவருக்கும் தனி அறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாபாவின் தரிசனம் முடித்து அன்றிரவு அறைக்கு ஓய்வெடுக்க வந்திருக்கின்றனர். இரவு உறங்கப்போகும் முன் குரு அவர்கள், மாதவராஜிடம் நாளை காலையில் நான்கு மணிக்கு கோவிலுக்குச் செல்கிறேன். நீங்களும் வருகின்றீர்களா என்று கேட்டிருக்கிறார்,

அவரோ, இப்பவே மணி பத்தா யிற்று இனிமேல் தூங்கி காலையில் விரைவாக எழுந்திருக்க முடியாது. முதலில் தூங்குவோம். காலையில் டிபன் முடித்துவிட்டு கோவிலுக்குச் செல்லலாம் என்று கூறியிருக்கிறார்.

அதற்கு குரு, இல்லையில்லை. நான் காலையில் அவசியம் கோவிலுக்கு சென்றே ஆக வேண்டும். எப்போது சீரடி வந்தாலும் காலையில் நான்கு மணிக்கெல்லாம் சமாதி மந்திர்க்கு உள்ளே செல்கிறேனோ இல்லையோ, ஆலய வளாகத்தில் எங்காவது தியானம்



– ஜெயந்தி ஸ்ரீராம்

செய்வது எனது வழக்கம் ஆகவே நான் காலையில் விரைவாக ஆலயத்திற்குச் செல்கிறேன்.

நீங்கள் கதவைப் பூட்டிக் கொள் ளுங்கள். என்று குரு அவர்கள் கூறியி ருக்கிறார்.

அதற்கு அவரோ, இல்லையில்லை. என்னால் முடியாது நான் தூங்கினால் நடுவில் எழுந்திருக்க மாட்டேன். நான்கு மணிக்கு கோவிலில் கூட்டம் அதிகம் இருக்கும். கூட்டத்தில் எப்படி தியானம் செய்வீர்கள். பேசாமல் நன்றாகத் தூங்குங்கள். காலையில் எட்டு மணிக்கு நாம் இருவரும் சேர்ந்தே கோவிலுக்குப் போவோம் என்று கூறியிருக்கின்றார்.

அதை ஏற்றுக்கொள்ளாத குரு, தயவு செய்து நீங்கள் எழுந்து

கதவைப் பூட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் எழுந்து கொள்ள வில்லை என்றால் நான் வெளியில் பூட்டிச் செல்கிறேன். என்று கூற, அதற்கும் மாதவ ராஜ் அவர்கள் மறுப்பு தெரி விக்க, இரவு நேரமாகி விட்ட படியால், வாக்குவாதம் செய்ய வேண்டாம். முதலில் தூங்குவோம் காலை யில் எழுந்து பார்த்துக் கொள் வோம் என்று நினைத்து குரு அவர்கள் காலையில் மூன்றரை மணிக்கு அலாரம் வைத்துவிட்டு உறங்கச் சென் றிருக்கின்றார்.

குரு அவர்கள் கட்டிலில் படுக்கும் வழக்கம் இல்லாத தால் மாதவராஜை கட்டிலில் படுக்கச் சொல்லி விட்டு குரு தரையில் படுத்திருக் கின்றார்.

நல்ல ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த குருவிற்கு அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் "அழைக்கிறான் மாதவன் ஆழ்நிலை கேசவன்" என்ற பாடல் ஒலி கேட்க, சட்டென்று எழுந்து மணியைப்பார்க்க மணி மூன்றுதான் ஆகியிருக்கின்றது. யார் அது பாடலை ஒளிபரப்பியது என்று பார்க்க, கட்டிலில் மாதவராஜ் உட்கார்ந்திருக்கின்றார்.

குரு அவரிடம் ஏன் நீங்கள் தூங்கவில்லையா? பாடல் கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்க, அவரோ சட்டென்று கட்டிலில் இருந்து எழுந்து கொண்டு,சற்று பரபரப்பாக, அட, ஏங்க நீங்க வேற, முதல்ல நீங்கள் எழுந்து குளித்துவிட்டு கோவிலுக்குப் புறப்படுங்கள். என்று அவசரப்படுத்தியிருக்கிறார்.

குரு அவர்கள் எழுந்துகொண்டு நான் புறப்பட்டுக்கொள்கிறேன். உங்க ளுக்கு என்னாயிற்று, ஏன் இவ்வளவு படபடப்பாக இருக்கிறீர்கள். கொ



ஞ்சம் அமைதியாக இருங்கள் மணி மூன்று தானே நான் மூன்றரைக்கு புறப்பட்டால் போதும் என்று கூற,

எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை. நன்றாகத்தான் உறங்கிக்கொண்டிருந்தேன். பத்து நிமிடத்திற்கு முன்பு கனவா, அது நனவா என்று என்னால் அதை சரியாக கனிக்கமுடியவில்லை.

தூங்கிக் கொண்டிருந்த என்னை பாபா எழுப்பி, அவன் தான் நான்கு மணிக்கு என்னிடம் வந்து தியானம் செய்ய வேண்டும் என்று கூறுகின்றானே! அவனை அனுப்பி வைக்க வேண்டியதுதானே! நீ வரவில்லை என்பதற்காக அவனை ஏன் தடுக்கிறாய்.

முதலில் அவனை எழுப்பி என்னிடம் அனுப்பும் வழியைப்பார். அவனை போக வேண்டாம் என்று சொன்னதற்கு தண்டனையாக ரூ. 1000 த்தை அவனது செலவிற்கு

கொடுத்து அனுப்பு. என்று கூறிவிட்டு மறைந்து விட்டார். எனவே நீங்கள் உடனடியாக எழுந்து புறப்பட்டு ஆலயத்திற்குச் செல்லுங்கள் என்று அவசரப்படுத்தினார்.

உடனே குருவும் எழுந்து குளித்து விட்டு ஆலயத்திற்கு புறப்பட மாதவராஜ் அவர்கள் ரூ.1000 த்தை குருவிடம் கொடுக்க, குரு வாங்க மாட்டேன் என்று மறுக்க, வலுக் கட்டாயமாக குருவிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பி வைத்திருக்கின்றார் மாதவராஜ் அவர்கள்.

இவ்வாறு குருவை மட்டும் அல்ல. முழுமையான அர்ப்பணிப்போடு வரும் பக்தர்கள் யாராக இருந்தாலும் அவர்களது நியாயமான ஆசைகளையும், தேவைகளையும், அப்போதைக்கப்போதே நிறைவேற்றி வைப்பதில் நமது சாயிதேவனுக்கு நிகர் நமது சாயி தேவனே!

சாய் தியானாலயாவிற்கு வழி காட்டும் லீலை.

நமது சாய் மகராஜ் குருவை தேடி மாத இதழைப் படித்துப்பார்க்க நேரும் பக்தர்கள் குருவை சந்திக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு வெகுதூரத்தில் இருந்தெல்லாம் வந்து சந்தித்துச்செல்வார்கள்.

அப்படி அவர்கள் எங்களது அலுவலகத்தை தேடி வரும் பொழுதும் வழி தெரியாமல் திகைக்கும் போதும் பாபாவின் வழிகாட்டுதல் எப்படி எல்லாம் எங்களுக்கு கிடைத்தது என்று மனம் மகிழ்ந்து கூறுவார்கள். அதில் இருந்து ஒரு சில அனுபவங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

மூன்று வருடத்திற்கு முன்பு நமது இதழ் வெளிவந்து மூன்று வருடங்கள் நிறைவு பெற்ற நிலையில், நமது புத்தகம் எங்கெங்கு எப்படி, யார் மூலம் செல்கின்றது என்று ஏதும் எங்களுக்குத் தெரியாது. ஆனால் பல ஊர்களில் இருந்தெல்லாம் எங்களுக்கு தொலைபேசி வரும். சிலர் புத்தகத்தை பாராட்டி பேசுவர், சிலர் சந்தா கட்டுவர், சிலர் நேரில் வந்து குருவை சந்திக்க வேண்டும் என்று நேரில் வந்து குருவை சந்திப்பர்.

இப்படித்தான் சித்தாலப்பாக்கத்தில் இருந்து எழுபது வயது பெரியவர் ஒருவர் குருவிடம் தொலைபேசியில் பேசி, உங்களது புத்தகம் சாயி மகராஜ் குருவை தேடி கிடைத்தது. படித்து பார்த்தேன். மிகவும் நன்றாக இருந்தது. உங்களை வந்து கண்டிப்பாக சந்தித்து பேச வேண்டும் என்று கூறி வழியை கேட்டு அறிந்து கொண்டு, ஒரு வியாழன் அன்று அயனாவரம் நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

புறப்பட்ட அன்று குருவிடம் நான் இன்று வருகிறேன் என்ற தகவலையும் கூறவில்லை. அடையாளத்திற்கு நமது புத்தகத்தையும் கையில் எடுத்துக் கொள்ளவில்லை. தொலைபேசியில் பேசியவற்றை மட்டுமே நினைவில் வைத்துப் புறப்பட்டிருக்கிறார். பேசிய தொலைபேசியும் அவரது இல்லை. ஒரு நண்பரிடம் வாங்கி பேசியிருக்கின்றார்

அயனாவரம் வந்ததும் அவருக்கு அலுவலக முகவரி மறந்துவிட்டது. அலுவலகம் வருவதற்குப் பதிலாக அருகில் இருக்கும் ஓட்டேரி என்ற பகுதிக்குச் சென்றுவிட்டார். காலையில் 10 மணிக்கு வந்தவர் மதியம் 12 மணிவரை சுற்றிப் பார்த்துவிட்டு ரோடு ஓரத்தில் இருக்கும் ஒரு சிறிய பாபா கோவிலின் வாசலில் அமர்ந்திருக்கின்றார்.

அப்போது அங்கே இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு இளைஞர் ஏன்



இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள். யார் நீங்கள், நீங்கள் எங்கே போக வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். பெரியவர் விபரம் கூறியிருக்கின்றார். அப்படியா, நீங்கள் கூறும் புத்தக ஆசிரியரை எனக்கு நன்றாகத் தெரியும்! வாருங்கள் நான் கூட்டிச்செல்கிறேன். என்று அவரின் இருசக்ரவாகனத்திலேயே கூட்டிவந்து நம் அலுவலகத்தில் விட்டுச் சென்றிருக்கின்றார்.

அவர் யார் என்பது எங்களுக்கும் தெரியாது. அது பாபாவிற்கே வெளிச்சம்.

அடுத்ததாக எண்பது வயதான சாந்தா என்ற மூதாட்டி, வயதான காலத்திலும், இன்றும் சுறுசுறுப்பாக, தன் வேலைகளை தானே கவனித்துக் கொண்டு யாரையும் எதிர்பார்க்காமல் ஒரு அலுவலகத்தில் உதவியாளராக வேலை பார்த்துக் கொண்டிருக்கின் றார்கள். அவருக்கு நமது குருவுடன் சீரடிக்குச் சென்று சாய்நாதனை தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட, குருவிடம் விளக்கம் கேட்க நேரில் வரலாம் என்று மூலக் கடை என்ற பகுதியில் இருந்து அயனா வரத்திற்கு பேரூந்து ஏறி வந்துவிட்டார்.

அன்று வியாழக்கிழமை ஆதலால் குரு அன்னதானம் செய்ய வெளியே சென்றுவிட்டார். மூதாட்டி அவர்கள் குருவிற்கு போன் செய்து நான் உங்களைப் பார்த்து பேச வேண்டும் உங்களது அலுவலகத்திற்கு எப்படி வரவேண்டும் என்று கேட்க, குரு அன்னதானம் செய்து கொண்டிருந்த படியால் விபரம் கேட்காமல் அலுவலகத்திற்கு வரும் வழியைக்கூறி வைத்துவிட்டார்கள்.

மூதாட்டி பல தெருக்கள் அலைந் தும் முகவரியை கண்டுபிடிக்க முடியாததால் பாபா ஏன் இப்படி சோதிக்கின்றார். என்றபடி சரி வீட் டிற்கு திரும்பிச் செல்லலாம் என்று மீண்டும் பேரூந்து நிலையம் செல்ல முற்படுகையில் ஒரு காவல்காரர், பாட்டி ஏன் நடுத்தெருவில் நிற்கின்றீர்கள் நீங்கள் எங்கே செல்ல வேண்டும். என்று கேட்டிருக்கின்றார். பாட்டியும் விபரம் கூற, உடனே காவல்காரர் நீங்கள் கூறும் சாய்ராமை எனக்கு நன்றாகத் தெரியும்.

அவரின் பக்கத்து வீட்டில்தான் நான் வசிக்கின்றேன். வாருங்கள் நான் கூட்டிச்செல்கிறேன் என்று பாட்டியை தன் வாகனத்திலேயே

அழைத்து வந்து நமது அலுவலகத்தில் விட்டுச்சென்றிருக்கிறார்.

குரு அன்னதானத்தில் இருந்து வந்த உடன் வயதான பாட்டி ஒருவர் தனக்காக காத்திருப்பதை கண்டு அவரிடம் பணிவாக விசாரித்தார். பாட்டியும் விபரம் கூற, அடடா முன்னமே தெரிந்திருந்தால் நான் உங்களை அலைய விட்டிருக்க மாட்டேனே! நானே வந்து அழைத்து வந்திருப்பேனே என்று கூற, அதற்கு பாட்டியோ, இல்லையப்பா, நானும் ரொம்ப அலையவில்லை. உங்க பக்கத்துவீட்ல வசிக்கும் போலீஸ்காரர்தான் என்னை அவரது வண்டியிலேயே அழைத்து வந்து விட்டுச்சென்றார்.

குருவும், நானும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம். நாங்கள் அதே முகவரியில் பதினைந்து வருடமாக இருக்கிறோம். எங்களது பக்கத்து வீட்டில் போலீஸ்காரர் யாரும் குடி இருந்தது இல்லை. என்னே சாயிநாதரின் லீலை.

மூன்றாவதாக, சென்ற மாதம் மயிலாப்பூரில் வசிக்கும் ஒரு பெண்மணி நமது இதழை படித்துப் பார்த்துவிட்டு அதற்கு சந்தாகட்ட வேண்டும் என்று விருப்பப்பட்டிருக்கின்றார். ஆனால் குடும்ப சூழ்நிலை காரணமாக அவர் வீட்டை விட்டு வெளியே வரமுடியாத சூழ்நிலை. நவீன தொலை தொடர்பு சாதனங்களை கையாள பழக்கம் இல்லாததால் வேளச்சேரியில் வசிக்கும் தனது சகோதரனிடம் விபரத்தைக்கூறி நமது இதழுக்கு சந்தா கட்டி உதவுமாறு கேட்டிருக்கிறார்.

அறுபது வயதைக் கடந்த அவரது சகோதரன் தனியாக வசித்து வருகிறார். அவரும் நவீன தொலை தொடர்பு சாதனங்களை கையாளும் பழக்கம் இல்லாதவர். தன் சகோதரியின் விருப்பத்தை நிறைவேற்ற அவரிடம் இருந்து நமது பழைய இதழ் ஒன்றை வாங்கிக் கொண்டு பேரூந்தில் ஏறி பயணப்படுகிறார்.

வயது மூப்பின் காரணமாக, இதழின் முகவரியை நாம் எங்கு போய் தேடுவது என்று சற்றே அயர்ச்சியுடன், பாபா நீதான் எனக்கு வழிகாட்ட வேண்டும் என்று மனதிற்குள் வேண்டிக்கொண்டு நமது புத்தகத்தை எடுத்து எதார்த்தமாக புரட்டியிருக்கின்றார். அப்போது அடுத்த நிறுத்தத்தில் ஒரு வயதான சுவாமியார் ஒருவர் ஏறி இவரின் அருகில் அமர, அவரும் எதார்த்தமாக அது என்ன புத்தகம் என்று கேட்க, இவரும் பாபா புத்தகம். இந்த புத்தகத்தில் அலுவலகத்திற்குத்தான் நான் சென்று கொண்டிருக்கின்றேன் என்று கூறியிருக்கிறார்.

சுவாமியார் நமது புத்தகத்தை கையில் வாங்கிப்பார்த்துவிட்டு, ஓ! சாய் மகராஜ் குருவை தேடி தானே, உங்களுக்கு இவரது அலுவலகம் தெரியுமா? என்று கேட்க, எனக்கு தெரியாதையா, ஆமாம் உங்களுக்குத் தெரியுமா என்று கேட்க, ஓநன்றாகத் தெரியுமே! இவரின் அலுவலகம் அமைந்திருக்கும் தெருவில்தான் எனது வீடும் இருக்கிறது.

வாருங்கள் நானே கூட்டிச் செல்கிறேன். என்று அவரே கூட்டிவந்து நமது அலுவலக்த்தின் வெளியே விட்டுச் சென்றிருக்கின்றார்.

இந்த செய்தியை கேள்விப்பட்டதும் குருவிற்கும் எனக்கும் ஆச்சர்யம். ஏன் என்றால் வந்தவர் கூறிய அடையாளத்தில் எங்கள் தெருவில் அப்படி ஒரு சுவாமியாரை நாங்கள் கண்டதேயில்லை. எல்லாம் சாயிநாதரில் லீலை என்பதை நாம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமா என்ன?

– தொடரும்.

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; சுந்தர்சாய், 9789404451

தொடர் –62


குருவைத் தேடி

அங்கிருந்து நாளை காலையில் புறப்பட்டால் இரவு சீரடியை அடைந்து விடலாம் என்றவர் வழியில் உதவும் என்றபடி சில பிஸ்கட் பாக்கெட்டுகளையும், ஒரு தண்ணீர் கேனையும் என்னிடம் கொடுத்து வாழ்த்துக்கள். என்னை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் என்றார். நான் அவரை நன்றியுடன் பார்த்து வணங்கி உங்கள் பெயர் அய்யா என்றேன். அவர் டாக்டர் சாய்ராம் என்றார்.

அவர் தன் பெயர் டாக்டர் சாய்ராம் என்றதும் எனக்குள் பிரகாசமான ஒளி தோன்றியது போலிருந்தது. எனக்கு சம்பந்தமே இல்லாத மாநிலத்தில் எனக்கு சம்பந்தமே இல்லாத தமிழர் ஒருவர் உதவி புரிகின்றார். பெயரைக்கேட்டால் சாய்ராம். என்கிறார். ஒருவேலை சாய்ராம்தான் எனக்கு சம்பந்தமானவரோ?

நான் சற்று தூரம் நடந்ததும், திரும்பிப் பார்த்தேன். டாக்டர் அங்கேயே நின்றிருந்தார். என்னைப் பார்த்ததும் புன்னகைத்து கையை அசைத்தார். சே! இந்த உலகத்தில் நல்லவர்கள் இருக்கிறார்கள். எனக்குள் புதிய உத்வேகம் புறப்பட்டது. கால்களில் சற்று வலி குறைந்திருந்தது.

மனதில் புதிய நம்பிக்கையோடு வேகமாக நடக்க ஆரம்பித்தேன். மருத்துவர் கூறியபடி இன்றிரவு சங்கம்நேர் மகாலட்சுமி ஆலயம் சென்றுவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். அன்று



எண்ணவோ வெயில் சிறிது குறைவாக இருந்ததால் சற்று வேகமாக நடக்க முடிந்தது. மதியம் 12 மணி இருக்கும். ஒரு சிறிய நகரத்திற்குள் செல்லும் போது ஒரு உணவகத்தை கடந்து சென்றேன். அவ்வளவுதான் உடனே பசிக்க ஆரம்பித்து விட்டது.

அருகில் இருந்த மரத்தடியில் சற்று அமர்ந்து மருத்துவர் கொடுத்த பிஸ்கெட்டுகளை சாப்பிடலாம் என்று பாக்கெட்டை எடுத்துப் பிரிக்க முயன்றேன். அது ஏற்கனவே பிரிக்கப்பட்டிருந்தது. மருத்துவரிடம் இருந்து வாங்கும்போது நான் அதை கவனிக்கவில்லை என்றபடி பாக்கெட்டை பிரிக்க அதனுள் மூன்று நூறு ரூபாய் நோட்டு வைக்கப்பட்டிருந்தது.

ஓ..! பணம் கொடுத்தால்

வாங்கமாட்டேன் என்று நினைத்து பிஸ்கெட் பாக்கெட்டிற்குள் வைத்து கொடுத்திருக்கின்றார் மருத்துவர். மனதிற்குள் மருத்துவருக்கு நன்றி கூறிவிட்டு, பையை எடுத்துக் கொண்டு உணவகத்திற்குள் சென்று இரண்டு நாட்களுக்குப்பின் நன்றாக வயிறு முட்ட சாப்பிட்டேன்.

பிறகு அருகில் இருக்கும் மரத்தடியில் சற்று ஓய்வெடுத்துக்கொண்டு மீண்டும் நடக்க ஆரம்பித்தேன். பொழுது சாயும் நேரம் நான் சங்கம்நேர் என்ற ஊரை அடைந்துவிட்டேன். ஊரில் எல்லையிலேயே மகாலட்சுமி ஆலயத்தை பார்த்து ஆனந்தப்பட்டேன். இன்று எண்ணவோ எல்லாம் நல்லதாகவே நடந்திருக்கிறது.

ஐம்பது கிலோ மீட்டர் எப்படி நடந்தேன் என்றே தெரியவில்லை. மதியம் மருத்துவரின் நல்ல மனத்தால் உணவகத்தில் உணவு உண்டேன். வெயில் அதிகம் இல்லாததால் தொடர்ந்து களைப்பில்லாமல் நடந்து வந்துவிட்டேன். யாரோ என் பின்னாலேயே என் நிழலாக வந்து கொண்டிருப்பதை போன்று உணர்ந்தேன். எல்லாவற்றுக்கும் சாயிநாதரே காரணம் என்று நினைத்துக்கொண்டேன். பாபாவிற்கு முதல்முறையாக மனதிற்குள் "மிக்க நன்றி சாய்ராம்" எனக் கூறிக் கொண்டேன்.

மெல்ல நடந்து மகாலட்சுமி ஆலயத்தை அடைந்தேன். வாசலில் இருந்த தண்ணீர்க் குழாயில் நீர் பிடித்து கை கால்கள், முகத்தைக்கழுவிக் கொண்டு ஒரு ஓரமாக சென்று அமர்ந்தேன்.

கோவிலில் பக்தர்கள் அதிகம் இல்லை. நேரம் செல்லச்செல்ல உள்ளூர் மக்கள் தரிசனத்திற்காக வந்தார்கள்.

இரவு எட்டுமணியிருக்கும் எழுந்து சென்று சாப்பிட்டு வரலாம் என்றால் கால்கள் கடுமையாக வலித்ததால் என்னால் எழுந்திருக்க முடியவில்லை. கால்களை நீவிக்கொண்டே அமர்ந்திருந்தேன்.

வயிறு கடுமையாக பசிக்க ஆரம்பித்தது. ஏதாவது சாப்பிட்டால் மருத்துவர் கொடுத்த மாத்திரையைப் போடலாம். கால்வலியை வேறு பொறுத்துக்கொள்ள முடியவில்லை. என்ன செய்வது என்று யோசித்தேன். சட்டென்று என் மனம் "ஏன் நீ அடிக்கடி பாபாவை மறந்துவிடுகிறாய்". அவர்தான் உனக்கு உதவி செய்வார். அவரிடமே கேள் என்றது.

உடனே எனது இன்னொரு மனம், இல்லையில்லை. நான் தான் இனி பாபாவே கதி என்று அவரைத் தேடி வந்துவிட்டேனே! பின்பு ஒவ்வொன்றையும் நான் கேட்டுத்தான் அவர் செய்ய வேண்டுமா? என்று அலுத்துக்கொண்டது. அப்போது மணி ஒன்பது. ஆலயத்தை பூட்டும் நேரமாதலால் இருந்த சொற்ப பக்தர்களும் எழுந்து வெளியில் சென்றனர்.

நானும் சிரமப்பட்டு எழுந்து வெளியில் வந்தேன். ஆலயத்திற்கு முன்பு ஏராளமான பெரிய மைதானம். அதில் பக்தர்களும், உள்ளூர் மக்களும் ஆங்காங்கே இப்போதே படுக்கையை விரித்து தூங்கத் தொடங்கியிருந்தனர். சற்று தூரத்தில் ஓர் உணவகம் கண்ணில் பட அதை நோக்கி மெல்ல நடந்து சென்றேன்.

அருகில் சென்றதும்தான் தெரிந்தது.

கடையில் வியாபாரத்தை முடித்துவிட்டு கடையை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சென்று ரொட்டியாவது இருக்குமா என்று கேட்டேன். இல்லை என்று கூறிவிட்டார்கள். அடடா, சற்று முன்னமே வந்திருக்கலாம் என்று நினைத்துக் கொண்டு தண்ணீர் கேனில் இருந்த மிச்ச தண்ணீரைக் குடித்துவிட்டு நானும் ஒரு மரத்தின் அடியில் சென்று பையில் இருந்த வேட்டியை எடுத்து விரித்து படுத்துக் கொண்டேன்.

நடந்து வந்ததனால் உடல் அசதி ஆக இருந்தாலும், வயிறு பசிக்கின்றதனால் தூக்கம் வரமாட்டேன் என்றது. மணி பத்து இருக்கும். எழுந்து அமர்ந்து கொண்டேன். ஊர் அடங்கிவிட்டது. ஆங்காங்க பக்தர்கள் உறங்க ஆரம்பித்து விட்டனர். பசி வந்தால் பத்தும் பறந்து போகும் அல்லவா? வறட்டு கௌரவம் எம்மாத்திரம். என் மனம் என்னையறியாமல் "பாபா எனக்கு சிறிது உணவு கிடைத்தால் நன்றாக இருக்கும்" என்று பிரார்த்திக்க ஆரம்பித்துவிட்டது.

அரைமணிநேரம் இருக்கும் தூரத்தில் ஒரு ஆட்டோ வந்து நிற்கின்றது. அதில் இருந்து பட்டுப்புடவை அணிந்து மங்களகரமான ஒரு நடுத்தரவயதுப் பெண்மணி ஒருவர் கையில் ஒரு ஒயர் கூடையுடன் கோவில் மைதானத்திற்குள் நடந்து வருகிறார். வந்தவர் நேரே என்னருகில் வந்து ஒயர் கூடைக்குள்ளிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து என்னிடம் கொடுத்துவிட்டு அன்போடு சிரித்தார்.

நான் வியப்போடு அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். அகலமான முகத்தில் மஞ்சள் பூசி பெரிய



பொட்டு வைத்து மங்களகரமாக காட்சியளித்தாள் அந்தப்பெண். யார் இவள். இவள் கொடுக்கும் பொட்டலத்தில் என்ன இருக்கும். என்று யோசித்த கண நேரத்தில் அந்தப் பெண் சட்டென்று திரும்பி நடந்துபோய் ஆட்டோவில் ஏறிச் சென்று விட்டாள்.

கணநேரம்தான் அங்கு ஒரு ஆட்டோ வந்ததாகவோ, அதில் இருந்து ஒரு பெண் இறங்கி வந்து என்னிடம் ஒரு பொட்டலத்தை கொடுத்ததாகவோ, ஒருவரும் பார்த்திருக்க மாட்டார்கள்.

அவ்வளவு விரைவாக நடந்து விட்டது அந்த நிகழ்ச்சி. நான் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பொட்டலத்தைப் பிரித்தேன். அதற்குள் ஆறு சப்பாதியும் கத்தரிக்காய்

கூட்டும் இருந்தது. ஆகா! சாயி நாதா, உன்னிடம் உணவு கேட்ட உடனே உணவு கொடுத்துவிட்டாயே! உண்மையில் நீதான் கொடுத்தாயா? அப்படி என்றால் உணவு கொண்டு வந்தது யாராக இருக்கும். இதென்ன விட்டலாச்சாரியார் படம் போல இருக்கின்றதே!

எனக்கு தெரிந்த ஊர், தெரிந்த மொழி,தெரிந்த வியாபாரம், தெரிந்த நண்பர்கள், தெரிந்த சொந்தங்கள், தெரிந்த வித்தைகள், அனைத்தும் பயனற்றுப்போய் என்னை கைவிட்ட போது, தெரியாத ஊர், தெரியாத மொழி, தெரியாத நண்பர்கள், தெரியாத சொந்தங்கள், தெரியாத வித்தைகள், எனக்கு கை கொடுப்பதெப்படி.

ஒன்றும் மட்டும் எனக்கு நன்றாகப் புரிந்தது. "எனக்கு தெரிந்த" என்ற அறிவு "எல்லாம் நானே" என்ற அகங்காரமாக மாறியதால் எனக்கு ஒன்றையும் தரவில்லை. இப்போதோ எல்லாவற்றையும் இழக்க வைத்து, உணவிற்குக்கூட என்னை ஏங்க வைத்து "எல்லாம் நீயே" என்ற பணிவு ஏற்பட்ட உடன் தேவைக்கு கிடைக்கிறது

என்னுடைய "நானை" அறுத்து, "அகங்காரத்தை"ப் பொசுக்கி மாயையை விலக்கி, மெய்ஞானத்தை எனக்குப் புகட்டிய சாயிதேவா, நான் உன்னை தேடிவந்ததன் நோக்கம் இதுதானா! என்னை ஏற்றுக்கொள். எனக்கு ஞானம் கொடு. எனக்கு வேறு ஏதும் வேண்டாம்.நான் உன்னைத் தேடி புறப்பட்ட போது எதை கேட்டு வந்தேன் என்று எனக்கு தெரியாது. ஆனால் இப்போது உன்னிடம் எதைக்கேட்க வேண்டும் என்று புரிந்து கொண்டேன். சாயிதேவா! என் கடவுளே!

எனக்குள்ளாக ஏதோ ஒரு மாயவித்தை நிகழ்ந்து கொண்டிருந்தது. அந்தப் பெண்ணின் மங்களகரமான முகமும், அவளது சிரிப்பும் என் மனக்கண்ணின் முன்னால் வந்து வந்து போனது. சாயிநாதரின் மீது எனக்கு ஏதோ திடீரென்று அதிக காதல் ஏற்படுவது போன்று இருந்தது. உடனே சீரடி சென்று அவரை பார்க்க வேண்டும் என்று மனது துடித்தது. என்னால் எனது மனதை சிறிது நேரம் வரை கட்டுப்படுத்தமுடியவில்லை.

மனம் சாயி! சாயி! என்று புலம்ப ஆரம்பித்து. கண்களில் நீர் தளும்ப சப்பாத்தியை சாப்பிட்டு முடித்து பேப்பரில் கையை துடைக்கும் போதுதான் பார்க்கிறேன் அது தமிழ் பேப்பர். ஏதோ ஓர் ஆர்வத்தில் கசக்கிய பேப்பரை விரித்துப் பார்க்கிறேன். அது ஒரு தமிழ் ஆன்மீகப்பத்திரிக்கை. அதில் என் கண்களில் பட்ட வரிகளை படிக்கின்றேன்.

"நீயாக என்னைத் தேடி வரவில்லை" குழந்தாய். எந்த தெய்வத்திடம் நம் கஷ்டங்களை எல்லாம் சொல்லி அழுவது என்று நீ மருகி நின்ற போது, நான் இருக்கிறேன் என்று காணாது போன குழந்தையைத் தேடும் தாயாய், "நான் தான் உன்னைத் தேடி வந்தேன்".

அந்த அளவிற்கு நான் உன்னை நேசிக்கிறேன். உன் பூர்வ புண்ணியம் மிகவும் பெரிது குழந்தாய். உன் மூதாதையர்கள் செய்த புண்ணியங்கள். அதனால்தான் நான் உன்னைத்தேடி வந்தேன். நான் உன்னுடன் இருக்கையில் எப்போதும் எதற்காகவும் நீ கலங்கக்கூடாது.

உனக்கு என்ன செய்ய வேண்டுமோ அதை நான் செய்வேன். என்

குழந்தைகளின் நல்வாழ்வுக்காகவே அவதரித்து வந்தவன் நான். நீயோ, நான் தேடிக் கண்டு பிடித்த புதையல். இந்த புதையலை திரும்பவும் மண்ணில் வீசி எறிய விடமாட்டேன். இந்த சாயியின் கஜானாவில் உன்னைக் கண்ணின் மணியாகப் பாதுகாப்பேன்.



என்ற செய்தியை படித்ததும் என் கண்கள் தானாக தாரை தாரையாக கண்ணீரை சிந்த ஆரம்பித்தது. பெற்ற தாய் தந்தை, உடன் பிறந்த சகோதர சகோதரிகள், உறவுக்காரர்கள், உற்ற நண்பர்கள், அனைவரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நம்மிடம் இதைப் போன்று கூறியிருப்பார்கள். ஆனால் கூற வேண்டிய நேரத்தில் கூறியிருப்பார்களா என்பது சந்தேகமே!

மேலும் அவர்கள் அத்துணை நபர்களும் நம்மிடம் ஏதாவது ஒன்றை எதிர்பார்த்தே கூறுவார்கள் என்பதே சத்தியம். ஆனால் எதையுமே எதிர்பார்க்கா மல், சரியான நேரத்தில், சரியான உதவியை செய்து, நாம் ஆசு வாசப்படும் நேரம் பார்த்து, சரியான செய்தியைக் கூற இறைவனால் மட்டுமே முடியும்.

"நான் தேடி வந்தேன்" என்ற அகங்காரத்தையும் உடைத்து. நீ என்னைத் தேடி வரவில்லை. நான் தானடா உன்னைத்தேடி வந்தேன் என்று உள்ளதை உள்ளவாறு விளக்கி யருளிய என் ஞானத்திருவே!

எதை விடுவது, எதை தேடுவது, என்ற அறிவே இல்லாது நிலையற்ற உலகப்பொருட்களின் மீது பற்று வைத்து மமதையில் திரிந்த இதை, இதைதான் விட வேண்டும், இதைத் தான் தேட வேண்டும் என்றருளிய ஞானப்பிழம்பே!

பிழைக்கும் வழிதனை பெரும் அளவினில் கற்கினும், உலக பொருட்களை எல்லாம் சம்பாதித்துக் குவிப்பினும், ஆண்டாண்டு காலம் ஆண்டு வாழ்வேன் என இதுநாளும் வாழ்ந்துவிட்டேனே! அவை எல்லாம் நிலையில்லாதது என கண நேரத்தில் பசியறிந்து உணவு ஊட்டியபோது ஞானத்தையும் புகட்டிய பரம தயாளா!

ஒப்பு பெறாத உலக வாழ்க்கைக்காக உப்பு, புளி, மிளகாய் தேடி காலத்தை கரைத்து விட்டேனே! இனி ஒரு விநாடியும் உன்னைக்காணாமல் என்னால் இருக்க முடியாது. உன் தரிசனத்தை உடனே நான் பெற்றாக வேண்டும். என்னுடைய நேரத்தை நான் வீணாக செலவு செய்தது போதும். இனி கணப்பொழுதும் தாமதிக்க மாடடேன் என்றவாறே எனது பையை எடுத்துக் கொண்டு ஆலயத்தை விட்டு வெளியேறினேன்.

ஆலய மைதானத்தை கடந்ததும் உலகை இருள் கவ்வியிருந்தது.

எந்தப் பக்கம் செல்வது என்று தெரியவில்லை. எனது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. வெப்பம் உச்சஞ் தலைவரை ஏறியிருந்தது. காய்ச்சல் வந்த உணர்வைப்போல் என் மனம் உணர்ந்தது. நாக்கு வறண்டு தண்ணீர் தவித்தது. அருகில் இருந்த குழாயில் தண்ணீர் பிடித்து குடித்துவிட்டு முகத்தை கழுவிக் கொண்டேன். மணி இரவு 12 இருக்கும். மனம் ஓயாது சாயி சாயி என்று அரற்றியது.

என் மனம் என்னையும் மீறி எதையோ செய்தது. இருள் கவ்வியிருந்த தெருவை ஒருமுறை முறைத்துப் பார்த்தேன். பின்பு சற்று நேரம் கூட தாமதிக்காமல் இருளுக்குள் புகுந்து நடக்க ஆரமபித்தேன். தெருவில்தானே இருள். என் மனம் முழுவதும் ஒளி, பேரொளி படர்ந்திருந்தது. இப்பேரொளிமுன் இவ் விருள் எம்மாத்திரம். இதைத்தான் தெய்வப்பித்து என்பார்களோ?

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான சாயிநாதரின் லீலா விநோதம்தான் என்ன? அவன் நினைத்தால் ஒரு விநாடியில் அனைத்தும் மாறிவிடும் என்பார்களே அது இதுதானா? இன்று இரவு எனக்கு உண்ண உணவு கிடைக்காதவரை என் உள்ளத்தில் இருள் பரவிக்கிடந்ததால் இந்த உலகைப்பார்த்து பயந்து கிடந்தேன். ஆனால் உலகம் "வெளிச்சமாய் இருந்தது".

உண்ண உணவும், உணவு கிடைத்த அனுபவம் ஞானமாகவும், எனக்குள் புகுந்தபின் என் உள்ளம் முழுக்க ஒளிபரவிக்கிடக்கின்றது. இப்போது "உலகம் இருண்டுகிடக்கின்றது". ஆனால் இப்போது என் உள்ளத்தில் சாயிநாதர் என்ற ஒளி பிரகாசிப்பதால் இந்த இருண்ட உலகைப்பற்றி எனக்கு பயம் இல்லை. என்கால்கள் தாமாக சீரடியை நோக்கி நடக்க ஆரம்பித்தது.

அது சீரடி போகும் பாதையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் சாயி, சாயி என்ற எனது ஒருமுகப்பட்ட சிந்தனையும் எனது தீவிரமான "சாயி காதலும்" என்னை சேர்க்குமிடத்தில் கொண்டு கண்டிப்பாக சேர்க்கும் என்ற நம்பிக்கையுடன், பொறுமையாக நடக்கலானேன்.

– தொடரும்.



மதத்தின் தன்மை

நீங்கள் இறைவனை உணர்ந்து விட்டால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல் மாறிவிடும். மொத்தத்தில் உங்கள் தோற்றமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்திற்கு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.

உடலையும், புலன்களையும் வழிநடத்தும்போது, மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக்கொள்ளுங்கள். சிறு சிறு ஆசைகளை அனுபவித்து தீர்த்துவிட வேண்டும். பெரிய ஆசைகள் அனைத்தையும் விவேகத்தால் ஆராய்ந்து விட்டுவிட வேண்டும்.

இல்லறத்தில் வாழ்ந்தபடியே காமத்தையும், பணத்தாசையையும் துறந்தவர்கள் பாக்கியசாலிகள். மதத்தின் ரகசியம் கொள்கைகளில் இல்லை. அது செயல்முறையில்தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வதுதான் மதத்தின் முழுப்பரிணாமமாகும்.

கைகளைத் தட்டுங்கள்



கைகளை தட்டினால் ஆரோக்கியம் மேம்படுமா ? ஆம் 30 வினாடிகள் தொடர்ந்து கைகளைத் தட்டுவதன் மூலம் 10 மீட்டர் தூரம் ஓடுவதால் கிடைக்கும் பலன் நமக்கு கிடைக்கிறது.

நமது இரு கைகளிலும் தோராயமாக 340 மெரிடியன் புள்ளிகளும், 14 முழு உடல் உறுப்புகளுடன் இணைக்கப்பட்ட புள்ளிகளும் உள்ளன. நாம் கைகளைத் தட்டும்போது இந்த புள்ளிகள் தூண்டப்பட்டு, நமது ஆரோக்கியம் மேம்பட உதவியாக செயல்படுகின்றன.

நமது உள்ளங்கையில் வயிறு, கணையம், சிறுநீரகம், தொப்புள் மற்றும் பெருங்குடலுக்கான புள்ளிகளும், பெருவிரல் மற்றும் சுண்டுவிரல் நுனியில் பாதங்களுக்கான புள்ளிகளும், நடுவிரல் நுனியில் கண், மூக்கு, மூச்சுக்குழாய்க்கான புள்ளிகளும், விரலின் நடு மூட்டுப் பகுதியில் நுரையீரல் மற்றும் விரலின் கீழ் மூட்டுப் பகுதியில் இதயத்துக்கான புள்ளிகளும், ஆள்காட்டி விரல் மற்றும் மோதிர விரல் நுனியில், கைகளுக்கான புள்ளிகளும், மோதிர விரல் நடு மூட்டுப் பகுதியில் கண்களுக்கான புள்ளிகளும் அமைந்துள்ளன.

உள்ளங்கைகளையும், விரல்களையும் ஒன்றோடு ஒன்று சேர்த்து தட்டுவதால் மெரிடியன் புள்ளிகளில் தொடுதல் உணர்வு ஏற்படும். அதனால் ரத்த ஓட்டம் தூண்டப்பட்டு, ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. கைகளைத் தட்டும்போது தூண்டப்படும் மெரிடியன் புள்ளிகளால், குறைந்த ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை, செரிமானக் கோளாறு, தலைவலி மற்றும் இதய நோய்கள் போன்றவை வராமல் தடுக்க முடியும்.

விரல் நுனியில் கண்கள் மற்றும் மூக்கு ஆகியவற்றுக்கான மெரிடியன் புள்ளிகள் உள்ளன. அவை கைத்தட்டலின் போது தூண்டப்பட்டு மூக்கில் ஏற்படும் நாசி அழற்சி, ரத்தப்போக்கு மற்றும் சைனஸ் பிரச் சனைகளை சீராக்குகின்றன. அத்துடன், மைய நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டை ஊக்குவித்து, ஆஸ் துமா போன்ற சுவாசம் சார்ந்த பிரச் சினைகளை தீர்க்கவும் உதவுகின்றன.

உள்ளங்கைகள், உடலின் உள்ளு றுப்புக்களுடன் இணைக்கப்பட்ட மெரிடியன் புள்ளிகளைக் கொண் டுள்ளன. அவை, உடலின் உள் உறுப்புகளின் செயல்பாட்டை மேம்ப டுத்துவதுடன், வாழ்வியல் நோய்களைக் கட்டுப்படுத்தவும் உதவி புரிகின்றன.

பின் கைகளைப் பயன்படுத்தி கைகளைத் தட்டும்போது எலும்புகளின் நலம் மேம்பட்டு, முதுகு வலி மற்றும் இடுப்பு வலியும் கூட குணமாகிறது.

சாதாரணமாக நாம் கைகளைத் தட்டுவதனால் இவ்வளவு நன்மைகள் கிடைக்கின்றதா என்றால் ஆம் உண்மைதான். ஆகவே இன்றில் இருந்து நாமும் கைகளைத் தட்டுவோம். காசா, பணமா? செய்துதான் பார்ப்போமே!

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!









அரிசி ஆலைகளுக்குத் தேவையான அனைத்து தரமான, உறுதியான, இயந்திரங்களும் நியாயமான விலையில் கிடைக்கும்.

SRI RAGHAVENDRA ENGINEERING

Manufacturers of Grain Cleaning Machinery with Latest Technology

84 - A, Rajalakshmi Nagar, T.V.S Nagar, Edayarpalayam.(PO), Coimbatore - 641 025.

விபரங்களுக்கு,

P.RAMESH, CELL: 98422 97846

சாயி மகராஜ் குருவை தேடி



6 ஆம் ஆண்டு விழா

நமது சாய் மகராஜ் குருவைதேடி ஆன்மீக மாத இதழின் 6 வது ஆண்டுவிழாவும், 61வது இதழ் வெளியீட்டு விழாவும், சாயி சேவகர்கள் 27 நபர்களுக்கு விருது வழங்கும் விழாவுமாக, முப்பெரும் விழா, கடந்த 13.8.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சென்னை டி.நகர் காந்திமதி திருமண மண்டபத்தில் கோலாகலமாக நடந்தேறியது.

காலை 8 மணிக்கெல்லாம் வெளியூர்களில் இருந்து பக்தர்கள் வர ஆரம்பித்துவிட்டார்கள். விழா சரியாக 9 மணிக்கு செல்வி.அமிர்தா, செல்வி. அட்சயா ஆகியோர் இறை வணக்கம் பாட இனிதே துவங்கியது.

அதைத்தொடர்ந்து குரோம்பேட்டை "தில்லை நாட்டியாலயா" குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடந்தது. குழுவினர், பாபாவின் பாடலுக்கு மிகச்சிறப்பாகவும், அற்புதமாகவும் பரதநாட்டியம் ஆடி பக்தர்களை மகிழ்வித்தனர். அதைத்தொடர்ந்து நாட்டியம் ஆடிய குழுவினர் அனைவருக்கும் ஆசிரியர் அவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

தொடர்ந்து விழாவினை, சீரடிவாசி, "வாழும் பாபா" சுவாமி அச்சுதானந்தா அவர்கள் தலைமையேற்று தொடங்கி வைத்தார்கள். மேலும் விழாவிற்கு





வருகை தந்திருந்த வி.ஐ.பி. களை வரவேற்று பொன்னாடை அணிவித்து கவுரவித்தார்கள்.

தொடர்ந்து திரு.அச்சுதானந்த சுவாமிகள்,திரு.சுந்தர்சாய், திரு.கலியன் சாய், ஸ்ரீமதி. வல்லபானந்தமயி, ஸ்ரீமதி. உதி.சுனந்தா, திரு. சிவானந்தம், திரு.பிரகாஷ், திரு. தினகர் ஆகியோர் உரையாற்ற அதைத்தொடர்ந்து, ஆசிரியர் அவர்கள் கடந்து வந்த பாதை என்ற தலைப்பில் பக்தர்களிடையே உரையாற்றினார்கள்.

அடுத்ததாக இம்மாத இதழை சுவாமி அச்சுதானந்தா அவர்கள் வெளியிட, 30 வருடங்களுக்கு மேலாக மவுன யோகத்தில் இருக்கும் "சித்த யோகினி" தாயம்மா அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

தொடர்ந்து குழந்தைகளுக்கு பாபாவின் ஓவியத்திற்கு வண்ணம் தீட்டும் போட்டியும், பெரியவர்களுக்கு, ஓம் சாய்ராம் எழுதும் போட்டியும் நடத்தி பரிசளிக்கப்பட்டது, தொடர்ந்து சிறப்பாக சாயி சேவை செய்த 27 நபர்களுக்கு விருது அளித்து கவுரவிக்கப்பட்டது.

காலையும், மதியமும் சாய் தியானாலயா சார்பில் விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் சிறப்பான அன்னதானம் வழங்கப் பட்டது.

அடுத்ததாக திருநின்றவூர் "சாயி நாமதாசன்" திரு.முரளி அவர்களின் நாம சங்கீர்தனம், மிகச்சிறப்பாக நடைபெற்றது. கோவை அன்புச் சகோதரர்கள் திரு.இரவி, திரு. தீபக், திரு.பால்கண்ணன் ஆகியோரின் மேற்பார்வையில் பல்லக்கு சேவை நடத்தப்பட்டது.

நமது ஆசிரியரும், குண்டலினி யோகியுமான திரு.ஸ்ரீராம் சாய் அவர்கள் ஏற்கனவே அறிவித்தபடி திருமதி.பாஞ்சாலி சாந்த மூர்த்தி அவர்களுக்கு பக்தர்களின் பலத்த சாயி கோஷங்களுக்கிடையே, "சாயி தீட்சை" வழங்கினார்கள்.

வந்திருந்த பக்தர்கள் அனைவரும் சாயி பகவானின் பல்லக்கை சுமந்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர். மாலை 4 மணிக்கு பகவான் சாயிநாதருக்கு மங்களாரத்திபாடி விழா இனிதே நிறைவு செய்யப்பட்டது.

விழாவில் விருது பெற்ற எங்களது





சாயி சேவார்த்திகள். சாயி சேவை புரியும் ரத்தினங்களுக்கு, இந்த எளிய விருதை அளிப்பதில் பெருமை கொள் கிறது "சாயி மகராஜ் குருவை தேடி".

ஸ்ரீ வல்லபானந்தமயி அம்மா அவர்களுக்கு "மங்கையர்கரசி" விருதும், ஸ்ரீமதி.ஹேமாவதி நமசிவாயம் அவர்களுக்கு "அன்னமாயி" விருதும் ஸ்ரீமதி.மாதங்கி பாலாஜி அவர்களுக்கு "கலைவாணி" விருதும், ஸ்ரீமதி. சாந்தி அவர்களுக்கு "இறை ஓசை" விருதும் வழங்கப்பட்டது.

மேலும் ஸ்ரீமதி.புவனா அவர்களுக்கு "வேத ஒலி" விருதும், ஸ்ரீமதி. திலகம். அவர்களுக்கு, "சேவா ரத்தினம்" விருதும், ஸ்ரீமதி. ஜெயந்தி ஸ்ரீராம் அவர்களுக்கு "இராதாகிருஷ்ணாயி" என்ற விருதும், திரு.சிவானந்தம் சாய் அவர்களுக்கு "ஆத்ம நேசர்" விருதும், திரு.டி.கோபால் சாய் அவர்களுக்கு "சேவா ரத்தினம்" விருதும் வழங்கப்பட்டது.

மேலும் திரு.சந்திரன் சாய் அவர்களுக்கு "காண கந்தர்வன்" விருதும், திரு. முரளிசாய் அவர்களுக்கு "சாயி நாமதாசன்" விருதும் திரு.விஸ்வநாதன் சாய் அவர்களுக்கு "சாயி நேசர்" விருதும், திரு.வேணு கோபால் சாய் அவர்களுக்கு "சாயிநேசர்" விருதும், திரு.டி.கார்த்தி கேயன் சாய் அவர்களுக்கு "சாயிநேசர்" என்ற விருதும் வழங்கப்பட்டது,

மேலும் திரு.பிரசாத் சாய் அவர் களுக்கு "சேவா ரத்தினம்" விருதும், திரு. தீபக் பாலசுப்பிரமணியன் சாய் அவர்களுக்கு "சேவா ரத்தினம்" விருதும், திரு.இரவிசாய் அவர்களுக்கு "சேவா ரத்தினம்" விருதும், திரு. பால் கண்ணன் அவர்களுக்கு "சேவா ரத்தினம்" விருதும், திரு. ஜெயசந்திரன் சாய் அவர்களுக்கு "சித்திரச் செல்வன்" விருதும் திரு. ராஜகோபால் சாய் அவர்களுக்கு "அன்னமாயி" விருதும், திரு.ஏ.சுரேஷ் பாபு சாய் அவர்களுக்கு "சேவா ரத்தினம்" என்ற விருதும் வழங்கப்பட்டது.

மேலும் திரு.வெங்கடேசன் அவர் களுக்கு "சித்தர்தாசன்" விருதும், திரு. முத்து மகேஸ்வரன் அவர்களுக்கு "சித்தர்தாசன்" விருதும் திருமதி. மோனிகா முத்து மகேஸ்வரன் அவர் களுக்கு "சித்தர்தாசன்" விருதும்



திரு.சுப்பிரமணி அவர்களுக்கு "சித்தர் தாசன்" விருதும், திரு.முத்துக் குமார் அவர்களுக்கு "சித்தர்தாசன்" விருதும், திரு.சுரேஷ் அவர்களுக்கு "சித்தர்தாசன்" என்ற விருதும் அளித்து கவுரவிக்கப்பட்டது.

ஆசிரியரின் "கடந்து வந்த பாதை" உரை

எல்லாம் சாயி! எல்லாமே சாயி! வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!.

மேடையில் வீற்றிருக்கும் எமது முன்னோடிகள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு எனது சிற்றுரையை துவக்குகிறேன்.

2018 மே மாதம் பகவான் சாயிநாதரின் பரிபூரண ஆசீர்வாதத்தால் தொடங்கப்பட்ட நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழ் இம் மாதத்துடன் தனது ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்து ஆறாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கின்றது.

எவ்வளவோ இடர்கள், எவ் வளவோ தடைகள், அத் தனையும் தாண்டித்தான் ஆறாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கின்றோம் என்றால், பகவான் சாயிநாதர் தனது சட்காவால் நைய்யப் புடைத்து விடுவார்.

இடர் இல்லாத செயல் ஏது? தடைகள்தான் இல்லாது உயர்வு ஏது? உறுதி மிக்க வர்களுக்கு இடர்களும், தடைகளும் எம்மாத்திரம். அதனிலும் பகவான் சாயிநாதரை சற்குருவாக வரித்துக்கொண்டவருக் கெல்லாம் இடர்களும், இடைஞ்சல்களும் கர்மாவை கழிப்பதற்குண்டான வரம் அல்லவா?

புத்தகம் நடத்துவது என்பது உங்களுக்கு வேண்டுமானால் உயர்வாக தெரியலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை அதுதான் எனது கர்மா! கர்மாவை தீர்க்க எளிய வழி கர்மாவை அனுபவித்து விடுவதே!

அதன்படி அனுபவிக்க தயாராகி விட்டால் அதனால் ஏற்படும் வலி களையும், கஷ்ட நஷ்டங்களையும் நான்





ஏற்றுக்கொள்கிறேன் என்ற அருள்வாக்கை திருவாக்காய் நமக்களிக் கும் பகவான் சாயிநாதர் இருக்கையில் ஏது குறை எமக்கு.

முதல் புத்தகத்தில் இருந்து இம்மா தத்தின் 61 வது இதழ்வரை இதையே யாம் கடைபிடிக்கின்றோம். எனவே இடர்களும், தடைகளும், இனிய உறவுகளே எப்போதும் எமக்கு.

கடந்து வந்த பாதையில் கள்ளும் முள்ளும் இருப்பது அனைவருக்கும் இயல்பானதே! ஆனால் அதை தாண்டி னோமா அல்லது கள்ளையும் முள்ளையும் பார்த்துக்கொண்டு அங்கேயே நிற்கிறோமா என்பதுதான் கேள்வி. பகவான் சாயிநாதரின் அனுக்கி ரகத்தோடு நாம் ஐந்தாம் ஆண்டை தாண்டி இன்று ஆறாம் ஆண்டில் அடி எடுத்து வைத்துவிட்டோம்

எனவே குற்றம் குறை கூறுபவர்க ளுக்குப் பதில் கூறிக்கொண்டு காலத்தை யும் நேரத்தையும், வீணடிக் காமல், நமக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுத்தவர்களை நினைந்து நன்றி கூறி, சாயி பக்தியை இன்னும் இன்னும் மக்களிடையே பரப்பி, கடந்து வந்த பாதையை புனிதப் பாதையாக மாற்றிக் கொள்வதே சாய் தியானா லயாவின் கொள்கை! கோட்பாடு!

முதற்கண் வெகுகாலம் சாயி பாதையில் பயணித்து, அநேக பக்தர்களை சாயிபாதைக்குத் திருப்பிய தவயோகி திரு.சாயிபாத மெய்யடிமை அய்யா அவர்களும், சாயி என் வாழ்க்கை உன்னோடு தான் ஆசிரியர் திரு.சிவநேசன் அய்யா அவர்களும் இவ்வருடம் பாபாவின் பாத கமலங்களில் சரண் அடைந்து விட்டார்கள்.

அவர்களது ஆன்மா சாந்தியடைய இவ்வரங்கத்தில் கூடியிருக்கும் அனைத்து சாய் பக்தர்களின் சார்பாக "சாய் தியானாலயா" பிரார்த்தனை





மையம் பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக்கின்றது.

சாயி பக்தியிலும், இறைச் சேவையிலும், தன்னலகம் கருதாமல், தன்னுடைய ஓய்வுகாலத்திலும், ஓய்வை விரும்பாது சாயி சேவை செய்து வரும், பாபா பக்தர்களின் முன் னோடிகளான திரு. பாண்டிச்சேரி பாபா மாஸ்டர், திரு.குருவருள் வேண்டி அசோக்குமார் சாய்ராம், திரு.கோபால் சாய்ராம் திரு.சுந்தர் சாய்ராம், திரு. கலியன் சாய்ராம் ஆகியோர் பகவான் சாயிநாதரின் பரிபூரண ஆசியுடன் நீள் ஆயுள் நிறை செல்வம் வான் புகழ் பெற்று, நம்மை எல்லாம் பலகாலம் சாயி சேவையில் வழிநடத்திச்செல்ல வேண்டுமாய் பிரார்த்தித்து, அவர்களின் சேவைக்கு தலை வணங்குகிறது சாய் மகராஜ் குருவை தேடி.

இந்நேரத்தில் இதழ் தொடங் கியதில் இருந்து இன்றுவரை, இதழ் வெளிவருவதற்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்து வரும் அனைத்து சாய் உள்ளங்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றி!

ஆண்டு விழா நடைபெற பெரும் பங்கு உதவிகரமாக இருந்த குருவருள் வேண்டி திரு. அசோக்குமார் சாய்ராம் திருமதி ஜெயந்தி முரளி, திரு.அண்ணாமலை, திரு. உதி.மூர்த்தி திரு. இந்துமதி, திரு. மாதங்கி பாலாஜி திருமதி. பிரதீபா தீதி, திரு.அகஸ்டின் திரு. அய்யா கண்ணு, திரு.இராஜசேகர் ஆகியோருக்கு விழாக்குழுவினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இருப்பினும் இன்றைய கால கட்டத்தில் இதழின் வளர்ச்சிக்கு அதிக உதவிகள் தேவைப்படுவதால் சாய் பக்தர்கள் அனைவரும் தங்களால் இயன்ற சந்தாதாரர்களை இணைத்தலே உங்களிடம் இருந்து நாங்கள் எதிர்பார்க்கும் பெரும் உதவி.

நமது இதழைப் படிப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற முடிந்த வரை ஆயுள் சந்தாதாரர்களை இணைத்து சாயி சேவை செய்வார்களே யானால் இதழ் சிரமமின்றி தொடர்ந்து வெளிவர ஏதுவாக இருக்கும். எமது கோரிக்கையை சாயி பக்தர்கள் செவி மடுத்து ஆவண செய்வீர்கள் என்று நம்புகிறோம்.

அதே போன்று நமது சாயி மகராஜ் மாத இதழ் அற்புதமான சிறப்பான சாயி செய்திகளை தாங்கி வருகின்றது. இதை மற்ற சாய் அன்பர்களும் படித்து பயன்பெற வேண்டும் என நீங்கள் நினைத்தால். 15 ரூபாய் விலை கொண்ட நமது நூலை குறைந்தது 10 புத்தகங்கள் வாங்கினால் 8 ரூபாய்க்கு வழங்க "சாய் தியானாலயா சேவா சங்கம்" முடிவு செய்திருக்கின்றது.

சாய் அன்பர்கள் இவ்வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்களால் இயன்ற புத்தகங்களை வாங்கி மற்ற சாய் பக்தர்களுக்கு அளித்து சாயி சேவை புரிந்து பகவான் சாயிநாதரின் அருளைப்பெற்று புத்தகத்தின் வளர்ச்சியிலும் பங்கு பெற வேண்டும் என்பது எங்களது பேரவா.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.



அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

மனம் அடங்க மந்திர செபம்

மனதை ஜெயிக்க நினைத்து மனதோடு முரண்பட்டு நிற்காமல். அதை ஒரு நண்பராக பாவித்து மனதை பழக்கப்படுத்திக் கொள்ளலாம். இது எளிய வழியும் சரியான வழியும் கூட.

யானை நடந்து வரும் பொழுது அது துதிக்கையை அங்கும் இங்கும் ஆட்டிக் கொண்டே வரும். பாகன் அதன் துதிக்கையில் அவனது அங்குசத்தை கொடுத்ததும் துதிக்கையை அங்கும் இங்கும் அசைக்காமல் நேராக நடக்கும்.

தரிசு நிலத்தில் களைகள் மண்டி அந்த நிலமே புதராக காட்சியளிக்கும் நீங்கள் எத்தனை முறை அந்த இடத்தை சுத்தம் செய்தாலும் களை வளர்ந்து புதர் மண்டி தான் கிடக்கும்.

அந்த சுத்தம் செய்த இடத்தில் நெற்பயிரை பயிரிட்டால் களைகள் வளராது அப்படியே வளர்ந்தாலும் அது அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் வளர்ந்து நிற்கும். அதை நாம் எளிதில் பிடுங்கி எறிந்து விடலாம். நிலத்தை சுத்தமாக பராமரிக்க நெல்மணிகளை விதைப்பதே ஆகச் சிறந்த வழி.

அதைப்போன்றே நம்மனதில் களைகளைப் போன்று கண்டதையும் விதைக்காமல் நல்லவற்றை விதைக்க கற்றால் மனம் தானாகவே அடங்கும்.

நாம் தொடர்ந்து மந்திர ஜெபம் ஜெபித்துக் கொண்டு வர மனம் தானாகவே மந்திரத்தை உச்சரிக்க ஆரம்பிக்கும். எவ்வாறு எனில், நீங்கள் காலையில் மந்திர ஜெபம் செய்து முடித்துவிட்டு வேலைக்காக கிளம்பி உங்களது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போதே மனதில் பல எண்ண ஓட்டங்கள் வந்து



போய் கொண்டு இருக்கும் பொழுது

காலையில் நீங்கள் ஜெபித்த மந்திர ஜெபமும் ஒரு எண்ணமாக உங்களுக்குள் வரும். அப்போது நீங்கள் உங்களை அறியாமலேயே அந்த மந்திரத்தை கவனிக்க ஆரம்பிக்க மனம் மந்திரத்தை உச்சரிக்க துவங்கிவிடும் நீங்கள் எதிரில் வரும் வாகனங்களையும் கவனித்துக் கொண்டு, அருகில் வரும் வாகனங்களின் ஒலிகளையும் கேட்டுக் கொண்டு வண்டியை ஓட்டிக் கொண்டிருப்பீர்கள்.

உங்களுக்கு உள்ளே இருக்கும் ஒன்று, மனம் ஜெபிக்கும் மந்திரத்தை மட்டுமே கவனித்துக் கொண்டிருக்கும். பிறகு இந்த அனுபவம் அடிக்கடி நமக்கு நடக்கும்.உங்களின் கவனிக்கும்திறன் தொடர்ந்துகொண்டே இருக்க, நீங்கள் கவனிப்பவனில் மீது மையம் கொள்வீர்கள். அப்போது மனம் எஜமானனுக்கு நன்றி விசுவாசமாக இருக்கும் ஒரு நாய்க்குட்டி போல நீங்கள் கொடுத்த வேலையை அதாவது மந்திர ஜெபத்தை ஜெபித்துக் கொண்டே இருக்கும்.

மன அழுத்தம்



குருவை பணிந்து எம்முள் எழுந்த சிறு சிந்தனையை தங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். இவ்வுலகில் ஆரம்ப பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் முதல் முதிர்ந்தவர் வரை மன அழுத்தம் இல்லாதவர்களே இல்லை என்ற நிலையில் இன்றைய உலக வாழ்க்கை கட்டமைக்கப்படுகிறது. வேறு வழியின்றி அதனுள்ளே பயணிக்க வேண்டிய சூழ் நிலையில் நாமும் நம் மனஅழுத்தத்தின் ஆழத்தை அறியாமல் வாழ்கையை அதன் போக்கில் அமைத்துக்கொள்கிறோம்.

அவ்வாறு அமையும் வாழ்கையில் எப்போதோ நிகழ்ந்திருக்கும் இன்பத்தை பேசி இப்போது அதுபோல் இல்லையே என்று இன்பமாய் நிகழ்ந்ததை துன்பமாக மாற்றிக்கொண்டு மன அழுத்தத்தை வளர்த்துக்கொள்கிறோம்.

ஒருநாளாவது நாம் அதை சிந்தித்துப் பார்த்தோமா?

அழுத்தத்தின் ஆழத்தை அறிய சில கேள்விகளை நம்முள்ளே நாமே கேட்டுக்கொள்வோம். முதலில் மன அழுத்தம் என்றால் என்ன என்று பார்பதற்கு முன் மனதோடு சற்று பயணிப்போம். மனம் என்ற ஒன்று இல்லையென்றால் மனிதன் தன்னை மனிதன் என்றே உணர்ந்திருக்க முடியாது அல்லவா? மனமே, மனி தனை முழுமை பெற்றவனாகவும் முழுமை பெறாதவனாகவும் காட்டுகிறது

இப்படி மனம் தான் ஓர் மனிதனை நிறைவாகவும் குறைவாகவும் வெளிப்படுத்துகிறது. மேலும் அவன் எவ்வழியில் பயணிக்க வேண்டும் என்ற தீர்வை தீர்மானிக்கின்ற எஜ மானாகவும் இருக்கிறது. அப்பேற்பட்ட மனதிற்கு சொல்லிலோ, செயலிலோ, காட்சியிலோ சலனம் ஏற்பட்டால் அதுவே மன அழுத்தமாக மாறுகிறது.

எப்போதெல்லாம் உடலுக்கும் மனதிற்கும் ஒத்துழையாமை ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் அழுத்தம் வருகிறது

என்னதான் மனதிற்கு அழுத்தம் வந்தாலும் பாதிக்கப்படுவது மனம் அல்ல, உடல்தான். ஆனால் தன்னை இயக்கும் மாபெரும் சக்தி மனதிடமே உள்ளதென்பதை நன்குணர்ந்த உடலானது அவ்வளவு எளிதில் மனதோடு ஒத்துழைப்பதில்லை. மாறாக மனதை தன்வசப்படுத்தி சுகம் காணவே விரும்புகிறது .

இவ்வாறு உடல் ஒத்துழையாமை புரிவதாலும் செயல்கள் அனைத்தும் தேக்கநிலையில் இருப்பதாலும் மனதிற்கு அழுத்தம் ஏற்பட்டு வேறுவழியின்றி உடலை வலுக்கட்டாயமாக செயலாற்ற நிர்பந்திக்கும்போது மனதுடன் முரண்பாடு ஏற்பட்டு மனதிற்கும், உடலுக்கும் அழுத்தம் தானாக ஏற்பட்டுவிடுகிறது.

அவ்வழுத்தத்தை ஏற்ககூடிய பக்குவத்தில் உடல் இல்லை என்றால் அந்நேரத்தில் மனதில் எழக்கூடிய எண்ண அலைகள் அனைத்தும் செயல் படாத நிலைக்கு தள்ளப்படும். அப்போது அதுவே அழுத்தமாக மாறி சகிப்புத்தன்மையற்ற நிலையில் மனம் செல்லும். அவ் வாறு நடந்தால் சின்ன சின்ன பிரச்சினைகளுக்கெல்லாம் உணர்ச் சிவயப்படும்போது மன அழுத்தம் ஏற்படுகிறது.

இவ்வாறு மன அழுத்தம் ஏற்படும்போது அதன் விளைவுகள் என்னவென்று நடைமுறையில் பார்க்கும்போது சகமனிதரிடமே எரிச்சலடைவது, சினம் கொள்வது, மனநலம் பாதிப்பது, உட்சபட்சமாக தற்கொலை செய்துக்கொள்வது. ஆகிய விரும்பத்தகாத செயல்கள் நடைபெருகின்றன.

இவ்வாறு தொடர்ந்து சினம் கொள்ளும் போது, இயல்பாக எழும் எண்ணங்கள் தடைபடுவதால் மனது அதைத் தாண்டிச்செல்ல முடியாமல் ஒரே சிந்தனையையே சுற்றிச்சுற்றி வருவதால் மன இறுக்கம் ஏற்பட்டு மன நலம் பாதிக்கப்பட்டவராகிறார்கள்.

மன அழுத்தத்தினால் ஏற்படும் பிரச்சனைகளை எதிர்கொள்ள தைரியம் இல்லாதிருப்பது போன்ற நிலையில் இருப்பவரே தற்கொலை என்னும் முடிவை கையில் எடுக்கின்றனர்.

அப்படியானால் மன அழுத்தத்தில்



இருந்து விடுபடுவது எவ்வாறு? என்ற கேள்வி நம்முள் எழும் நம்மை சுற்றியிருப்பவர் மீதும், நம்மிடம் இருக்கும் பொருட்கள், புகழ், பதவி மீது பற்றற்று இருந்தாலே மிக இலகுவாக

மன அழுத்தத்திலிருந்து விடுபட லாம். இல்லையேல் எதுவெல்லாம் நிலையானதோ எதுவெல்லாம் மாறா ததோ எதுவெல்லாம் அழிவற்றதோ, அதை உணர்ந்து அதன்படி இருக்கப் பழகிக் கொண்டாலும் மன அழுத் தத்திலிருந்து விடுபடலாம்.

இவ் உலக வாழ்க்கையில் அனைத் தும் நிலையானது என்றென்னி நம்மிடம் என்னவெல்லாம் இருக் கின்றதோ அதன்மீது பற்றுவைத்து விடுவதால் பற்றுவைக்க வேண்டிய மெய்ப் பொருளைப்பற்றி நாம் சிறிதும் சிந்திப்பதில்லை.

முதலில் நாம் நிலையானவர் அல்ல என்ற புரிதல் இருந்தால் தான் நம்மிடம் இருக்கும் அனைத்து பொருளும் நிலையற்றது என்ற புரிதலை நம்மால் உணரமுடியும். இப்படி நிலையற்ற மனிதன் மீதும் பொருட்கள் மீதும் பற்றுக்கொள்ளாதிருந்தால் தான் நிலையானது எது என்ற சிந்தனை எழும். அவ்வாறு எழுந்த சிந்தனையை ஆராயும் போது நிலையான மெய்ப் பொருளை உணரலாம் அவ்வாறு உணர்ந்ததை பற்றிக் கொள்ளும் போது மன அழுத்தம் தானாக விலகும்.

வாழ்க வளமுடன்!

குரு வாழ்க! குருவே துணை!

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer: Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

தொடர் –26

சாய் சரவணன்

"அதி தேவதை"

நாம் கடந்த அத்தியாயத்தில் இராதாகிருஷ்ணமாயிக்கு நம் பாபா தன் நாமத்தையே "குரு உபதேசமாக" வழங்கினார் என்பதைக் கண்டோம். நம் ஆயியின் லட்சியமான சங்கல்பத்தில் ஷீரடியில் சில மாற்றங்களை உருவாக்கினாள் என்பதையும் கவனித்தோம்.

அதாவது ஷீரடி கிராமத்தையே சுத்தம் செய்வது, பாபாவின் ஏழை பக்தர்களுக்கு தங்குவதற்கான "சாதே வாடா" கட்டப்பட்டது. பாபாவிற்கு பிடித்தமான "அன்னதான சேவை" தொடங்கியது. இவைகளை பற்றி நாம் ஏற்கனவே கண்டோம். இப்போது ஷீரடியில் பாபாவிற்கு "குரு பூர்ணிமா" அன்று குருபூஜை செய்யும் வழக்கத்தை பாபாவும், இராதா கிருஷ்ணமாயியும் எப்படி ஒருங்கிணைந்து தொடங்கினார்கள் என்பதை நாம் காணப்போகிறோம்.

ஷீரடியில் ஆயியின் மீது சிலர் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். ஆனால், பலர் ஆயியின் மீது பொறாமை கொண்டும், வம்பு செய்த வண்ணமே இருந்தனர். இதை எல்லாம் அந்தர்மியான சாயி நாதர் அறிந்து வைத்திருந்தார். ஒரு நாள் அன்னையை பாபா இனிமேல் நீ மசூதிக்கு வராதே எனக் கூறி பொய்க் கோபம் காட்டி பாசாங்கு செய்தார்.

அன்றிலிருந்து ஆயி பாபாவை தூரத்தில் இருந்தபடியே வணங்குவாள். பாபா சாவடிக்கு சென்ற பிறகு ஆயி மசூதியில் பக்தர்களோடு இணைந்து



சேவை செய்வாள். ஆயி தன் நித்திய சேவையை விடாது செய்து வந்தாள். இதற்கிடையில் தான் 10.7.1908 அன்று ஆயிக்கு பாபா குரு உபதேசம் செய்த லீலையை பார்த்தோம்!

உபதேசம் கிடைத்ததும் ஆயி எப்போதும் சாயி என்ற நாமத்தை சதா ஜெபம் செய்தாள். (10.7.1908) அன்றிலிருந்து மூன்றாம் நாள் (13.7.1908) "குரு பூர்ணிமா" திருநாள் வருவதை ஆயி அறிந்தாள். பாபாவும் அறிந்து இருந்தார். ஆயி ஷீரடியில் "குரு பூர்ணிமா" விழாவைத் தொடங்க

சங்கல்பித்தாள். பாபா ஆயியின் சங்கல்பத்தை நிறைவேற்ற காத்திருந்தார்.

பாபாவிற்கும், ஆயிக்கும் இருக்கும் ஆத்ம ஒற்றுமையை அவ்வளவு எளிதாக நாம் புரிந்து கொள்வது கடினம். ஆகையால் எப்படி அந்த"குரு பூர்ணிமா" விழா சீரடியில் முதன்முதலாக ஆரம் பித்தது என்பதைப்பற்றி காண்போம்.

நம் அன்னை முதன்முதலாக ஷீரடியில் குரு பூர்ணிமா விழா கொண்டாடுவதற்காக சாயிநாதருக்கு "குருபூஜை" செய்வதற்குண்டான பூஜா திரவியங்கள், வாசனை பொருட்கள் என யாவற்றையும் சேகரித்து வைத்துக் கொண்டாள்.

மேலும் பாபாவிற்கு முதன்முதலாக சமர்ப்பணம் செய்ய "சில்லீம் புகை குழாயையும், திராட்சையையும்" தயார் செய்து வைத்துக் கொண்டாள். ஷீரடியில் குரு பூர்ணிமா பற்றி எவரும் அறியவில்லை, பாபாவின் நெருங் கிய பக்தர்களும்கூட ஏதும் அறியா குழந்தைகள் போலவே பாபாவை அண்டி இருந்தனர். ஆயியின் ஏற்பாடு கள் யாவையும் பாபா அறிந்து வைத்தி ருந்தார். நாளும், நேரமும் ஒன்று கூடியது. 13.07.1908 அன்றைய தினம் "குரு பூர்ணிமா" நிறைந்த பௌர்ணமி தினம்.

அன்றைய தினம் அன்னை பாபாவை வணங்க மசூதிக்கு வந்தாள். ஆயியை கண்ட பாபா திடீரென்று திட்ட ஆரம்பித்தார். கற்களை வீசினார் எனினும் ஆயி எங்கும் நகரவில்லை. அனைத்தையும் குருவின் ஆசிர்வாதம் என்று ஏற்றுக்கொண்டாள்.

பாபா ஆயியை "உன்னை யார் இங்கு வரச்சொன்னது போ, நீ உன் இடத்தில் இரு" எனக் கூறினார். பாபாவின் தரிசனம் கிட்டிய பிறகு ஆயி மீண்டும் பிருந்தாவனத்திற்குச் சென்றாள். ஆயியின் நித்ய அனுஷ்டான பூஜை அறையில் பாபாவின் சித்திரத்தையும், விட்டலனது சித்திரத்தையும் மலர்களால் அலங்கரித்தாள்.

தீபங்களை ஏற்றி சாயிநாதர் இன்று செய்ய இருக்கும் லீலையை காண ஆவலோடு எதிரர்பார்த்தப்படி கண்களை மூடி சாயிநாதரை போற்றி துதிகளை மனமுருகி பாடினாள். அதே சமயம், மசூதியில் இருந்த தாதா கேல்கர், நூல்கர் போன்ற சில அடி யவர்களை "உடனே நீங்கள் ஆயியிடம் செல்லுங்கள்" என உத்தரவிட்டார் பாபா.

பக்தர்களும் அன்னையின் பிருந்தா வனத்திற்கு வந்தனர், ஆயியை கண்டனர். ஆயி அப்போது தன்னை மறந்து ஆடவும், பாடவும் செய்தாள். ஆயி பாடும் பாடலை கூர்ந்து நன்கு கவனித்தப்படி இனிமையான ஆயியின் குரலில் மயங்கி அங்கேயே அமர்ந்து கொண்டனர்.

அப்போது ஆயி பாடிய பாடல் யாதெனில் "குருஅஷ்டகம்" எனும் குருவின் மகத்துவத்தை உணர்த்தி நம் அறியாமை போக்கும் ஆதிசங்கரரின் பாடலாகும்.

* அழகான சரீரம் பெற்றிருப்பினும், அழகான மனைவியை பெற்றிருப்பினும், மிகச்சிறந்த பல விஷயங்களில் புகழ் பெற்றிருப்பினும், மேரு மலையின் அளவு செல்வம் பெற்றிருப்பினும் ஒருவன் மனம் குருவின் தாமரைப் பாதங்களை நாடாதாயின் அவற்றால் என்ன பயன்?

* மனைவியும், செல்வமும், மக்களும், பேரப்பிள்ளைகளும், வீடும், உறவினர்களும் இவை எல்லாம் இருப்பி னும் ஒருவன் மனம் குருவின் தாமரைப் பாதங்களை நாடாதாயின் என்ன பயன்?

* வேதங்களும் அறிவும், அறிவியல் அறிவும், எதையும் தெளிவாக விளக்கிச் சொல்லக்கூடிய அறிவும், கவிபாடும் திறமையும், உரை நடை, மற்றும் செய்யுள்



இயற்றும் ஞானமும் இருப்பினும் ஒருவன் மனம் குருவின் தாமரைப் பாதங்களை நாடாதாயின் என்ன பயன்?

* அயல் தேசத்தில் பெருமையுடனும், சொந்த நாட்டில் அதிர்ஷ்டத்துடனும், நல்ல ஒழுக்கத்தில் தன்னை விட சிறந்தவன் இல்லை என்று இறுமாந்திருப்பினும் ஒருவன் மனம் குருவின் தாமரைப் பாதங்களை நாடாதாயின் என்ன பயன்?

* நீ ஒரு அரசனாக இருந்தாலும். பல சாம்ராஜ்யத்தை ஆளும் பேரரசர்களும் மற்ற அரசர்களும் உன்னை சூழ்ந்திருந்தாலும் ஒருவன் மனம் குருவின் தாமரைப் பாதங்களை நாடாதாயின் என்ன பயன்?

* தன் வீரத்தாலும், ஈகையாலும், நான்கு திசைகளிலும் புகழ் பெற்றதால், இவ்வுலகமே தன் கையில் உள்ளது என நினைக்கும் ஒருவன் மனம் குருவின் தாமரைப் பாதங்களை நாடாதாயின் என்ன பயன்?

* சுகத்திலோ, விஷயங்களின் மீதுள்ள பற்றோ, பல குதிரை கூட்டத்திற்கே அதிபதியாக இருப்பதாலோ, அன்புக்கு உரியவர்களை பார்ப்பதாலோ, செல்வத்தையோ மனம் உறைவிடமாக கொள்ள இயலாது. இவை எல்லாம் பெற்றும் ஒருவன் மனம் குருவின் தாமரைப் பாதங்களை நாடாதாயின் என்ன பயன்?

* காட்டில் இருக்கும் பொழுதும், வீட்டில் இருக்கும் பொழுதும், உடலை பேணுவதிலேயே மனம் மூழ்குகிறது. ஆனால் விலை மதிப்பில்லா விஷயங்களில் மனம் ஒன்றுவதே இல்லை. அப்படிப்பட்ட ஒருவன் மனம் குருவின் தாமரைப் பாதங்களை நாடாதாயின் என்ன பயன்?

* விலை உயர்ந்த ரத்தினம், முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட அழகான, அன்பான மணப்பெண்ணும், ஆளுமைக்குள் வரினும் ஒருவன் மனம் குருவின் தாமரைப் பாதங்களை நாடாதாயின் என்ன பயன்?

* எவர் ஒருவர் குருவின் மீதான துதியான இந்த அஷ்டகத்தை குருவின் வார்த்தைகளின் மீது நம்பிக்கை கொண்டு மனம் ஒன்றி கூறுகிறாரோ, அவர் சன்யாசியோ, கல்வி கற்கும் மாணவனோ, அரசனே, இல்லற தர்மத்தில் இருப்பவனோ, யாராக இருப்பினும் அவர் விரும்பும் பிரம்ம ஞானத்தை அடைவார்.

இந்த அஷ்டகத்தை ஆயி திரும்ப,

திரும்ப பாடி சமாதி நிலைக்கே சென்று மூர்ச்சையானாள். பாபா பக்தர்கள் திடுக்கிட்டனர், ஆயி உயர்ந்த சமாதி நிலை அடைந்ததை பற்றி அவர்கள் அறியவில்லை. இந்த சமாதி பாவநிலையை இராமகிருஷ்ண பரமஹம்சர், சைதன்ய மஹாபிரபு, அமிர்தானந்தமயி போன்ற சிறந்த மகான்கள் பல சமயங்களில் அடைந்து ஆனந்த நிலையில் திளைத்திருப்பர்.

இவர்களைப் போலவே தான் ஆயியும் அந்நிலையை எய்தி மூர்ச்சை ஆனாள். ஆனால் இந்நிலையை அறியா பாபாவின் பக்தர்கள் ஆயியை எழுப்பி பார்த்தனர். உயர்ந்த நிலையில் இருந்த ஆயி எழவே இல்லை.

எனவே பயந்து போய் பக்தர்கள் பாபாவிடம் நடந்ததை கூற வந்தனர். பாபாவோ "அவள் எழுந்து கொள்வாள்" எனக் கூறினார். பிறகு எவரும் ஆயியை காண சாலாவிற்கு செல்லவில்லை. ஆயி சாயிநாதரை நினைத்துப் பாடிய குரு அஷ்டகத்தின் பொருளையும், அன்று குருபூர்ணிமா எனும் குருவின் மகத்துவம் நிறைந்த நாள் என்றும் யாரும் அறியவில்லை.

மசூதியில் மதிய நேர தரிசனம் முடிந்தது. எல்லாரும் அவரவர் இடத்திற்கு சென்றனர். அப்போது பாபா ஒருவரை விட்டு "தாதாகேல்கரையும், ஆயியையும் உடனே மசூதிக்கு வரச்சொல்" என உத்தரவிட்டார்.

பாபாவின் உத்தரவை தாங்கி வந்தவர் தாதா கேல்கரிடம் பாபாவின் அவசர அழைப்பை கூறினார். பின் அவர் ஆயியிடம், பாபாவின் செய்தியைக் கூற சாலாவிற்கு சென்றார்.

கேல்கருடைய மனம் பதறியது. பாபா ஏன் மசூதிக்கு வரச்சொல்கிறார் என்ன நடக்கப்போகிறதோ என பயந்தபடி கேல்கர், நூல்கர் எல்லோரும் மசூதிக்கு விரைந்தனர். பாபா மசூதியில் துனியின் அருகில் அமர்ந்திருந்தார். மசூதியின் படிகளில் கேல்கர், நூல்கர் ஆகியோர் நின்றிருந்தனர்.

– தொடரும்...

நாம செபம்



சரணாகதி என்பது செய்பவர், செயல், செயப்படும் பொருள் இம்மூன்றுமே கடவுளாக ஆவதுதான். அதனை கட்டாயத்தால் செய்ய முடியாது. பக்தி நிரம்பிய இதயத்திற்கு அது இயல்பாக வருகிறது. இதயத்தில் ஊற்றெடுக்கும் புதிய இனிய நீரை போன்றவர் கடவுள். அதன் வற்றாத ஊற்றைத் தோண்டி அதன் இனிமையைச் சுவைப்பதற்கான கருவி இறைவனின் நாம ஜபம் மட்டும்தான். எல்லாச் செயல்களையும் இறைவனுக்கே அர்ப்பணித்து விடுங்கள். அப்போது அகந்தைக்கு இடமிருக்காது. அதுவே அகந்தையை அடக்க விரைவான வழி

இறைவனின் நாமத்தை உச்சரிக்க முயற்சி செய்யுங்கள். சாயிபாபாவிடம் போகும்போது பஜனை தவிர அங்கு வேறொன்றுமில்லை என்று மக்கள் கூறலாம். பஜனையை விடப் பெரியது எதுவுமில்லை என்பதை உணருங்கள். பஜனைகளில் என்ன ஒரு ஆனந்தம்! கடவுளின் பெயரை உச்சரிப்பதில் எண்ணற்ற குரல்கள் இணைவது அற்புதமான ஒற்றுமையின் நிரூபணம்! அவற்றிலிருந்து வெளிப்படும் அதிர்வுகள் இதயங்களைத் துடிப்பாக்கும்.

இறைவன் மனிதன் மனம்!



சாய் அன்பர்களே! அனைவரையும் சிரம் தாழ்த்தி வணங்குவதில் மகிழ் கிறேன். குருபரம்பரையில் உயர்ந்த இடத்தில் இருக்கும் ஒரு மகானின் வாக்காகிய, இறைவன் மனிதன் மனம் என்ற வாக்கியத்தினால் தூண்டப் பட்டதனால் இக்கட்டுரை.

இவ்வுலகினில் ஜீவிக்கும் அநேக சீவராசிகளில் மனிதன் மட்டுமே இறைவனை உணர்வதற்கு உரிமை யுள்ளவனாகிறான். அதற்கு காரணம், "மனம்". ஆனால் அந்த மனமே அவனை இறைவனிடம் இருந்து வெகு தூரத்திற்கு தள்ளி வைத்துவிடுகிறது.

இப்பூவுலகம் முழுவதும் நீக்கமற நிறைந்திருப்பது மாயை எனும் பிரகாசமான "இருள்".? மாயையான இருளே நம்மை வழிநடத்துவது மிகவும் விந்தையல்லவா? அதற்குக் காரணம் மனம். ஆக இறைவனை உணர காரணமாக இருக்கும் மனமே அதற்கு தடையாகவும் இருக்கிறது.

இவ்வளவிற்கும் காரணமான இந்த மனம் மேல் மனம், நடுமனம், ஆழ் மனம் என்ற மூன்று பிரிவுகளை உடையது.பல பிரிவுகளைக் கொண்ட கேவல வஸ்துவாகிய மனம் ஒரு பயில்வானைப்போல் நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பது. விந்தையிலும் விந்தை அல்லவா?

மாயை எனும் பிம்பத்தையே நமக்கு உண்மையான வாழ்க்கை பாதை என உணர வைக்கும் கேவல வஸ்துவாகிய மனம், நமக்கு கிட்டும் குருவருளாலும், நமது சிரத்தையான முயற்சியாலும், குருவருளே திருவருளாய் மலரும் பொழுது அதுவரை "கானல் நீராய்" இருந்த மாயை விலகி ஓடிவிடும்.

அதற்கு எவ்வழியிலாவது ஓர் ஊக்கம் தேவைப்படுகிறது. நம் மனதை வழிநடத்த வேண்டிய நமது புத்தியை இருள்நீக்கி பட்டை தீட்டி வைத்தால் மட்டுமே இந்த ஊக்கம் என்பது வேலை செய்யும். அதற்கு மிகவும் அத்தியாவசியமானது நல்ல நட்பு சத்சங்கம். இன்றைய சூழ்நிலையில் நம்மைச்சுற்றி இருக்கும் விஞ்ஞானக் கருவிகள் இதுபோன்ற நல்ல நட்புகளை எட்டாக்கனியாக்கி விட்டிருக்கின்றன.


அப்படியே சிறிதளவு எட்டி விட்டாலும்அதை எட்டிக்காயாக

உணர வைக்கும் நமது மனம். அதில் இருந்து நாம் விலக வேண்டுமானால் லௌகீக வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து குறுகிக்கிடக்கும் நம் மனமானது எல்லையில்லா பிரபஞ் சத்துடன் ஒன்றி விரிவானால்தான், உண்மையை அதன் சுய ஒளியில் காணவும், இந்த பூவுலக வாழ்க்கையில் ஒளி வேடம் பூண்ட இருளையும் அடையாளம் காண்பது எளிதாகும்.

மிகவும் எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், எதெல்லாம் நம் வாழ்விற்கு அவசியம் என நாம் நினைக்கி றோமோ அவை எல்லாம் கூடவே ஒரு துன்பத்தை மறைத்துக் கொண்டே வரும். பணம், வசதி, உறவுகள், என எதை எடுத்தாலும் அவை எல்லாம் நம் மனதின் படைப்புகளே! அவை இருந்தால் மட்டுமே நாம் வாழ்வில் நன்றாக வாழவதாக ஓர் பொய்யான தோற்றத்தை மனம் வருவாக்கும்.

உண்மையில் நமக்கு மிகவும் தேவையான ஒரு அமைதியான நிம்மதியான,வாழ்வை நம்மிடமிருந்து மறைக்கும் திரையாகிய மனதை தகர்ப்பதுதான் நம்மை நல்வழிப் படுத்தும் காரியமாகும். அதற்கு தேவையான செம்மையான சிந்தனை, வளமான எண்ணங்க ளோடு நாம் வாழ வேண்டும்,

எண்ணம் போல் வாழ்க்கை என்பது உண்மை அல்லவா? என்னுவது மனம் எனவே அந்த மனதை மாயையின் பின்னால் அலை யவிடாமல் நமது அறிவு



– சுந்தர்சாய்

தெளிவாக இருத்தல் அவசியமல்லவா? அந்த தெளிவே தெய்வீகம் எனப்படும். அது ஒரு வற்றாத ஜீவநதியாய் என்றும் எங்கும் பரந்து விரிந்து பிரவாகமாய் திகழ நாம் குழப்பமின்றி முழு நம்பிக்கையோடு குருவருளை நாட வேண்டும்.

நாம் நமது முழு நம்பிக்கையையும் முழுமையாக குருவின் சொல்லே மந்திரம் என உணர்ந்து செயல்பட்டால் நமது மனம் என்னும் யானையை எளிதாக அடக்கி அள முடியும்.


உண்மையை தெளிவாக உணர குழப்பமற்ற, ஆசையற்ற பயமில்லாத திண்ணமான மனம் மிகவும் அவசியம் அதற்கு கலியுகத்தின் கண்கண்ட கடவுளான சற்குரு சாயி மகராஜை நம் இல்லத்திலும், உள்ளத்திலும் இருத்துவோமாக!

குரு வாழ்க!

குருவருள் மலர்க!

குருவே துணை!

மருந்தாகும் உருளைக்கிழங்கு!



சாப்பிட்டதும் உடனடியாக உடலுக்குச் சக்தி தரக்கூடிய காய்கறிகளில் உருளைக்கிழங்கு மிகவும் முக்கியமானதாகும். மேலும் பல்வேறு வழிகளில் சமைத்து உண்ணத்தக்க வகையில் அமைந்துள்ளது இந்தக் கிழங்கு மட்டுமே! இதை அவித்தோ, சுட்டோ, வேகவைத்தோ, வறுத்தோ எப்படி பயன்படுத்தினாலும் கிழங்கின் மருத்துவக் குணம் மாறாமல் இருப்பது இக்கிழங்கின் சிறப்பம்சமாகும்.

ஒரு மனிதன் தினமும் பாலும், உருளைக்கிழங்கும் மட்டும் சாப்பிட்டால் போதும். உடலுக்குத் தேவையான அனைத்தும் சக்தியும் கிடைத்துவிடும். அந்த அளவுக்கு மாவுப்பொருளும், சர்க்கரையும், உருளைக்கிழங்கில் அபரிதமாய் உள்ளன.

மத்திய அமெரிக்கப் பழங்குடிகள் 5000 ஆண்டுகளுக்கு முன்பு நூறுவகையான உருளைக் கிழங்கு வகைகளைப் பயிர்செய்து தினமும் இதை மட்டுமே சாப்பிட்டு வந்தனர். சிலி நாட்டிலிருந்து ஈக்வடார் நாடு வரை ஆய்வுப்பயணம் செய்த ஸ்பானியர்களின் மூலமே உருளைக்கிழங்கு கி.பி.16 ஆம் நூற்றாண்டில் உலகெங்கும் பரவியது

அரிசி, கோதுமைக்கு அடுத்து உலக மக்களால் அதிகம் சாப்பிடப்படுவது, உருளைக்கிழங்கு. எல்லா தட்பவெப்ப நிலைகளிலும் விளையக்கூடியது என்பதால், உலகின் மிகமுக்கியமான வியாபாரப் பொருளாகவும் இது இருக்கிறது.

உடனடியாக உடலுக்குச் சக்தியைத் தரக்கூடிய உணவுப்பொருட்களை தரவரிசைப்படி ஒழுங்குப்படுத்தினால் பால், முட்டை, ரொட்டி, பிஸ்கட், கோழி ஆகியவற்றிற்கும் முதலில் இருப்பது உருளைக்கிழங்குதான்.

பாலைவிடப் புரதச்சத்து இதில் அதிகமாய் இருக்கிறது. பாலுக்குப் பதிலாக உருளைக்கிழங்கு மசியலைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் அது இரவில் 'திடீர் திடீர்' என்று பசியினால் விழித்துக் கொள்ளாமல் நிம்மதியாகத் தூங்கும்.

உருளைக்கிழங்கில் தோலுக்கு அருகில் தான் அதிக அளவு ஊட்டச்சத்தும் புரதச்சத்தும் தாது உப்புகளும் உள்ளன. எனவே, தோலுடன் வேக வைத்தே

சாப்பிட்டால் உருளைக்கிழங்கில் உள்ள அனைத்துச் சத்துணவையும் மருத்துவக் குணங்களையும் நாம் முழுமையாகப் பெறலாம். வாயுப்பொருள் என்று ஒதுக்காமலும், எண்ணெயில் வறுத்துச் சாப்பிடாமலும், உருளைக்கிழங்கை மற்ற வகையில் சமைத்துச் சாப்பிட்டு ஆரோக்கியமான வாழ்வைத் தொடர்ந்து பெறுங்கள்.

ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படும் சொறி, கரப்பான் போன்ற ஸ்கர்வி நோயைக் குணப்படுத்த உருளைக்கிழங்கு மசியலைக் சாப்பிட்டால் போதும். அவித்த உருளைக்கிழங்குகளை தோலுடன் மசித்துத் தினமும் ஒருவேளை வீதம் ஒரு வாரம் முதல் பத்து நாள்கள் வரை சாப்பிட்டால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.!

வயிற்றுப்புண், வயிற்றுக் கோளாறுகள், குடல் கோளாறுகள், இரைப்பைக் கோளாறுகள், ஆகியன உள்ளவர்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ள உருளைக்கிழங்குகளாகப் பார்த்து எடுத்து, அவற்றை பச்சையாக மிக்ஸி மூலம் சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். உணவு சாப்பிடுவதற்கு அரைமணி நேரத்திற்குமுன்பாக இந்தச் சாற்றில் அரை கப் அருந்த வேண்டும். இதுபோல், மூன்று வேளையும் உணவு நேரத்துக்கு முன்பு அருந்தினால் சரியாகும்.

உருளைக் கிழங்கில் உள்ள மாவுச்சத்து, அடிவயிறு மற்றும் இரைப்பைகளில் உள்ள குழாய்கள் வீங்குவதையும் அவற்றில் நச்சுநீர் தேங்குவதையும் முன் கூட்டியே தடுத்து உடலுக்கு நன்மை செய்கிறது.


இதே உருளைக்கிழங்குச்சாற்றை உடலில் எலும்பு இணைப்புகள் மற்றும் தசைப்பகுதிகளில் வீக்கம் முதலிய கோளாறுகளுக்கும், வாத நோய்களுக்கும் வெளிப்பூச்சாகத் தேய்க்க உடல் நலமுறும்.

உருளைக்கிழங்கை பச்சையாக தோலுடன் மிக்ஸியில் அரைத்து வடிகட்டி இரு தேக்கரண்டி வீதம், உணவு சாப்பிடுவதற்கு முன்பு, அருந்த வேண்டும். இப்படி அருந்திய சாறு உடலில் வாதநோயைத் தோற்றுவிக்கும் அமிலத்தை வெளியேற்றிவிடுகிறது. தொடர்ந்து உட்கொண்டால் வாதநோய் முற்றிலும் குணமாகும் சாத்தியம் அதிகம் உண்டு.

அவித்த உருளைக்கிழங்குகளின் தோல்களைச் சேகரித்து, சுத்தம் செய்து, ஒரு டம்ளர் தண்ணீரில் பத்து நிமிடங்கள் அடுப்பில் வைத்து இறக்கவும். பிறகு, இந்தக் கஷாயத்தை அருந்தினாலும் கீல் வாதம் தீரும். இந்த முறையில் தினமும் மும்முறை தயாரித்து அருந்த வேண்டும்.

கெட்டுப்போன இரத்தம், குடல்பாதையின் நச்சுத்தன்மை உள்ள அமிலம், சிறுநீரில் உள்ள புளிப்பு அமிலம் தொடர்பாக ஏற்படும் நோய்கள் உள்ளோர், நீண்ட நாள் மலச்சிக்கலால் அவதிப்படுவோர் ஆகியோர் உருளைக்கிழங்கு வைத்தியத்தை குறைந்தது ஆறு மாதங்கள் பின்பற்றினால் மேற்கண்ட நோய்களிலிருந்து பூரண நலம் பெறலாம்.

தினசரி உணவில் உருளைக்கிழங்கை அவித்தோ, வேகவைத்தோ, பொரித்தோ, சூப்வைத்தோ சேர்த்துக் கொள்வதுதான் உருளைக் கிழங்கு வைத்தியம். சோறு, சப்பாத்தி போன்றவற்றைக் குறைத்துக்கொண்டு உருளைக்கிழங்குடன் கீரை வகைகளை,



குறிப்பாக பசலைக்கீரை, தக்காளி, செலரி, வெள்ளரிக்காய், பீட்ரூட், நூல்கோல், போன்ற வற்றையும் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இதன் மூலம் தோலில் உள்ள அழுக்குகளும், சுருக்கங்களும் நீங்கிவிடும். மலச்சிக்கலும் அகன்று இரத்தம் சுத்தம் செய்யப் பட்டுப் புத்தம் புது மனிதனாக ஒவ்வொரு நாளையும் சந்திக்கலாம்.

வயதால் முகத்திலும், உடலிலும் சுருக்கம் உள்ளவர்கள் பச்சையாக உருளைக்கிழங்கை நசுக்கி முகத்திலும் மற்ற பகுதிகளிலும் தேய்த்துக்கொண்டு இரவில் தூங்கச் செல்ல வேண்டும். சுருக்கங்களை போக்கிச் சலவை செய்த துணிபோல இளமைத் துடிப்புள்ள முகத்தையும், சுருக்கமில்லாத தோலையும் உடலுக்குத் தந்துவிடுகிறது. இந்த வைத்தியம், அமெரிக்காவில் இந்த முறையில் இயற்கையாக முதுமையால் ஏற்படும் தோல் சுருக்கங்களை நீக்கிக்கொள்கின்றனர்.

ஆட்டுக்கறியுடன் உருளைக்கிழங்கு சேர்த்து சமைக்கக் காரணம் என்ன? உருளைக் கிழங்கு எளிதில் ஜீரணமாகி உணவுப்பாதையில் எந்த விதமான சிரமும் இன்றி ஆட்டுக்கறி செல்ல பயன்படுகிறது. எனவே ஆட்டுக்கறி செரிமானம் ஆக உருளைக்கிழங்கு பயன்படுகிறது.

உருளைக்கிழங்கு மெலிந்தவர்களை சதைப்பிடிப்புடன் உருவாக்கும். குண்டானவர்களை மேலும் குண்டாகி விடும்! எனவே, உடல் கொழுத்த மனிதர்கள் எண்ணையில் பொரித்த உருளைக் கிழங்கு வறுவலை முற்றிலும் தவிர்த்து, மாதம் ஒரு முறை அவித்த உருளைக்கிழங்கை அளவுடன் சாப்பிட வேண்டும்.

ஆரோக்கிய உணவாகத் திகழும் உருளைக் கிழங்கை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டு ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

பிறந்த நாள்

இறைவன் சாயி பாபாவிடம் இரண்டற கலந்திருக்கின்ற ஆன்மா. தனியாக உடலெடுத்து இந்த பூமியில் பிறக்கிற போது அவரின் பிரிவு தாளாமல் முதன்முதலாக அழுகிறது! பூமியில் ஜீவன் உடல் எடுப்பது பிறந்த நாளல்ல உண்மையில் இறைவனைப் பிரிந்ததனால் அது பிரிவு நாள்!



எப்போது ஆன்மாவை உணர்ந்து "இறைவன் சாயிபாபாவோடு கலந்து போகிறோமோ அப்போது தான் ஆன்மாக்களுக்கு பிறந்த நாள்!"ஞானம் பிறப்பதே மனிதனால் கொண்டாடப்பட வேண்டிய சிறந்த நாள்! அப்போதிலிருந்தே மனிதன் உண்மையில் வாழ ஆரம்பிக்கிறான்!

SRI SAI ROLLING SHUTTERS & MOTORISED ROLLING SHUTTER



வாடிக்கையாளர்களின் சேவையில் 13 வருட அனுபவம். தரமான மூலப்பொருட்களால் தயாரித்து நியாயமான விலையில் தமிழ்நாடு முழுவதும் வழங்குகிறோம்.







No:9/38, Puliyamarathottam,
Vadavalli Road, Edayarpalayam,
Coimbatore - 641 025.
E.mail: senthilkmr31@gmail.com.

G.SENTHIL KUMAR

98432 44969, 73730 34969, 98434 74969

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சிசித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் நந்திவரம் கூடுவாஞ்சேரி மலையாள சுவாமிகள் என்ற ஸ்ரீ ஞானகுரு சுவாமிகளின் சீவ பீட ஆலயத்தை தரிசனம் காண்போம் வாருங்கள்.

ஸ்ரீ ஞானகுரு சுவாமிகள்

ஞானத்தை எளிதில் அடைந்து விடலாம். ஆனால் ஆத்மஞானத்தை பெறுவது என்பது சற்று சவாலான விஷயமாகும். ஆனால் சித்தர்களை தவறாமல் வழிபட்டால் மிக எளிதாக ஆத்ம ஞானத்தை எட்டிபிடிக்க முடியும். ஆத்ம ஞான சிந்தனை யாருக்கு மேலோங்கி இருக்கிறதோ, அவர்களை சித்தர்களே அழைத்து தரிசனம் கொடுத்து விடுவார்கள். இது ஏராளமானோர் வாழ்வில் நடந்த, நடந்துவரும் நிதர்சனமான உண்மை ஆகும்.

சித்தர்களை தேடி செல்லச்செல்ல தான் ஆத்ம ஞானத்தில் விழிப்புணர்வு வரும். ஒரு கட்டத்தில் சித்தர்களை ஞான குருவாக ஏற்றுக்கொண்டு இந்த பிறவியை நிறைவு செய்ய வேண்டும் என்ற மன உறுதி பிறக்கும். ஞான குருவாக இருப்பதால் தான் சித்தர்கள் மிக உயர்ந்த நிலையில் வைத்து போற்றப்படுகிறார்கள்.

அத்தகைய சித்தர்களில் ஒருவர்தான்



மலையாள சுவாமி என்ற ஞான குரு சுவாமிகள். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இந்த சித்தர் வாழ்ந்து வந்தார். பிறகு இவர் கூடுவாஞ்சேரி நந்திவரம்

பகுதியில் குடியேறினார். யாரிடமும் எதுவும் பேசமாட்டார். இதனால் ஆரம்ப காலங்களில் இவரை யாருமே கண்டுகொள்ளவில்லை.

நந்திவரம் சிவன் கோவில் அருகே அந்த காலத்தில் மிகப் பெரிய அன்னச்சத்திரம் ஒன்று இருந்தது.

அந்த அன்னச்சத்திரத்தை நாடி தினமும் ஏராளமான சாதுக்கள் வருவதுண்டு. ஞான குரு சுவாமிகளையும் அப்படி வந்தவர்களில் ஒருவர் தான் என்று நந்திவரம் கிராம மக்கள் நினைத்தனர். ஆனால் அந்த அன்னச் சத்திரத்தில் ஞான குரு சுவாமிகள் நிரந்தரமாக தங்கினார்.



ஆனால் ஒரு தடவை கூட அவர் யாரிடமும் யாசகம் கேட்டதில்லை யாரிடமும் பேசவும் மாட்டார். எப்போதும் மவுனம்! மவுனம்! மவுனம், இதனால் அவரை பற்றிய தகவல்கள் எதையும் யாராலும் தெரிந்து கொள்ள முடியவில்லை. நாளடைவில் மக்கள் இவரை மிகப்பெரிய மகான் என்பதை புரிந்து கொண்டனர். அவரது தோற்றம் எளிமையாக இருந்தது. ஆனால் பார்வையில் தீட்சண்யம் காணப்பட்டது. இதனால் ஞானத்தை தேடி வந்தவர்கள் அவரிடம் சரணடைந்தனர்.

நந்திவரத்தை விட்டு வெளியே எங்கும் செல்லாத அவர் மதியம் ஒருநேரம் மட்டும் சாப்பிடுவதை வழக்கத்தில் வைத்திருந்தார். அதுவும் அறுசுவை உணவுகளை சாப்பிடமாட்டார். அகத்திக்கீரையை மட்டும் வதக்கிச் சாப்பிடுவார். அதையும் அவரே கடைகளுக்கு சென்று வாங்கிவருவார்.

சரியாக மதியம் 12 மணிக்கு அகத்திக்கீரையை சுத்தம் செய்து வதக்குவார். அதில் ஒரு கைப்பிடி எடுத்து சாப்பிடுவார். அதுதான் அவருக்கு உணவு.

இதைப் பார்த்து நந்திவரம் பகுதி மக்கள் ஆச்சரியம் அடைந்தனர். மூலிகை களை பயன்படுத்தும் வித்தையையும் அவர் அறிந்து இருந்தார். இதனால் நந்திவரம் பகுதி மக்களுக்கு அவர் மீது தனி மரியாதை உருவாகி இருந்தது.

சுமார் 12 ஆண்டுகள் இப்படி உருண்டோடியது. அவரது சிறப்பை உணர்ந்த மக்கள் அவரிடம் தங்களை ஆசீர்வதிக்கும் படியும், நோய் தீர்க்கும் மருந்துகள் தரும்படியும் கேட்டனர். முதலில் ஞானகுரு சுவாமிகள் அதில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் ஒரு கட்டத்துக்கு பிறகு தன்னை நாடி வரும் மக்களின் கவலைகளை போக்க உதவி செய்ய ஆரம்பித்தார்.

இதனால் ஞானகுரு சுவாமிகள் பல ஆண்டுகளாக கடைபிடித்து வந்த மவுனத்தை கைவிட்டு மக்களிடம் பேசத்தொடங்கினார். மக்கள் சொல்லும் பிரச்சினைகளை கேட்டார். அவர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கினார்.

தன்னை நாடிவரும் மக்களில் யார் செல்வத்தை விரும்புகிறார்கள். யார் ஆன்மீகத்தை விரும்புகிறார்கள் என்று எடைபோட்டு ஆன்மீகத்தில் ஈடுபாடு உள்ளவர்களை மட்டும் மெய்ஞானக் கருத்துக்களை போதித்தார்.

சில பக்தர்களிடம், 'நான் யார் என்று கேட்டுப்பாருங்கள். எல்லா பிரட்சனைகளுக்கும் விடை கிடைக்கும்' என்று அறிவுறுத்தினார். குறிப்பாக இந்த உலகத்துக்கு என்னை அனுப்பியது யார்? எதற்கு அனுப்பினார்? எப்படி அனுப்பினார்? எங்கிருந்து அனுப்பினார்? ஏன் அனுப்பினார்? அடுத்து எங்கு அனுப்புவார்? என்பன போன்ற கேள்விகளை கேட்க வைத்தார்.

இப்படி இந்த கேள்விகளை தனக்குத் தானே கேட்டுக்கொண்ட ஒவ்வொருவரும் மிகப் பெரிய ஆத்ம ஞானத்தை மிக எளிதாக பெற்றனர். சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் பிரபஞ்ச ரகசியத்தை ஞானகுரு சுவாமிகள் மிக மிக எளிதாக தேட வைத்தார். தான் 12 ஆண்டுகள் தனித்து இருந்து தவம் செய்தது போல, 12 ஆண்டுகள் மவுனமாக இருந்தது போல பலரையும் தனித்திருக்க வைத்தார். இந்த தவ வாழ்க்கை பலரையும் மேம்படுத்தியது.

சித்தர்கள் பெரும்பாலும் பரிபாசையில் தான் பேசுவார்கள். ஞானகுரு சுவாமிகளும் நிறைய பரிபாசையில் பேசினார். ஆனால் பிரச்சினை என்று வருபவர்களிடம் மிக சாதாரண மொழிகளில் புரியும்படி பேசுவார்.



அப்போது அவரது பேச்சில் மலையாளம் அதிகமாக காணப்படும்.

எனவே மக்கள் அவரை மலையாள சுவாமி என்று அழைக்க ஆரம்பித்தனர்.

முதலில் உடல்நோய் தீர்ப்பதற்காக மலையாள சுவாமிகளை நாடிவந்த மக்கள் பிறகு மனநிலையையும் அமைதிகொள்ளச் செய்ய தேடி வந்தனர். அவரை நேரில் பார்த்தாலே போதும் தோஷங்கள் விலகிவிடும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் உருவானது. இதனால் தினமும் நூற்றுக்கும் அதிகமானோர் சுவாமிகளை தேடி நந்திவரம் வந்தனர்.

அவர்கள் அனைவருக்கும் மூலிகை களை கொடுத்து ஆசீர்வாதம் செய்வார். சிலருக்கு மட்டும் விபூதி, மிளகை பிரசாதமாக கொடுப்பார்.

அவரிடம் இருந்தது இரண்டே இரண்டு காவி உடைகள் தான். ஒரு கைத்தடி

வைத்திருப்பார். யாசகம் எடுத்து சாப்பிட ஒரு திருவோடும் வைத்திருந்தார். இவை தான் அவரது சொத்து.

மிகப்பெரிய பணக்காரர்களை கண்டால் ஆலயங்களை புனரமைக்க உதவும்படி கேட்டுக் கொண்டார். அவரது இந்த வழிகாட்டுதல்களால் பல பழமையான ஆலயங்கள் சீரடைந்து உள்ளன. தற்போது நந்திவரத்தில் உள்ள சிவாலயமும் அவரது கைங்கரியத்தால் மேன்மை பெற்றதாகும். 1912ம் ஆண்டு 68 ஏக்கர் நிலத்தை அந்த ஆலயத்துக்காக மலையாள சுவாமிகள் பெற்றுக் கொடுத்திருக்கிறார்.

தன்னை நாடி வருபவர்களை ஞான மார்க்கத்தில் பக்குவப்படுத்திய மிகப்பெரிய சிறப்பு மலையாள சுவாமிகளுக்கு உண்டு. அவரால் வாழ்க்கையில் எத்தனையோ பேர் உயர்ந்த நிலைக்கு சென்றுள்ளனர். இன்றும் அவர்களது வாரிசுகள் நந்திவரத்துக்கு வந்து மலையாள சுவாமிகளை வழிபட்டு செல்கிறார்கள்.

1937ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ந்தேதி மலையாள சுவாமிகள் ஜீவ சமாதி அடைந்தார். நந்திவரத்தில் அவருக்கு சிவாலயம் அருகே அருளாலயம் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் விசாகம் நட்சத்திர தினத்தன்று சுவாமிக்கு குருபூஜை நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு அவருக்கு 85வது ஆண்டு மகா குருபூஜை நடத்தப்படுகிறது.

சுவாமிகள் காட்டிய ஞான வழியான 'நான் யார்' என்பதை ஒவ்வொருவரும் தமக்குள் தாமே கேட்டு பலன் பெற்றால் தான் அது மலையாள சுவாமிகளின் மீது நாம் காட்டும் உண்மையான அன்பாக இருக்கும்.

சீவ சமாதி ஆலய முகவரி:

ஸ்ரீலஸ்ரீ மௌன ஞானகுரு சுவாமிகள் என்ற மலையாள சுவாமிகள் சீவ பீடம், காசி விஸ்வநாதர் கோவில் பின்புறம், நந்தீஸ்வரர் காலனி, 108, குளக்கரை தெரு, நந்திவரம், கூடுவாஞ்சேரி.

பேரூந்து வழிதடம்: சென்னை செங்கல்பட்டு

இறங்குமிடம்: கூடுவாஞ்சேரி பஸ் நிலையம்.

புகைவண்டி வழிதடம்: சென்னை கடற்கரை செங்கல்பட்டு

இறங்குமிடம்: கூடுவாஞ்சேரி இரயில் நிலையம் அங்கிருந்து ஷேர் ஆட்டோ மூலம் சீவ சமாதியை அடையலாம்.

- (தொடரும்)

வாழ்வின் இலக்கு



முகத்தை உம் என்று வைத்துக் கொண்டு ஓம் என்று உச்சரித்தால் எப்படி ஒளி வரும்? ஒளிக்கே நம்மால் வலி தான் வரும்! ஆன்மீகம் என்பது இறுக்கமாக இருப்பது என்று நினைத்துக் கொண்டு மனம் எதை எதையோ கற்பனை செய்து கொண்டு நடிக்கிறது!

உண்மையில் ஆன்மீகம் என்பது மிகவும் எதார்த்த மானது, எளிமையானது, முக மலர்ச்சியே அடையாத ஒருவர் எப்படி அக மலர்ச்சி அடைய முடியும்? உங்கள் உள்ளத்தில் ஆயிரம் கவலைகள் இருந்தாலும், உதடுகள் எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கட்டும். எது வாழ்க்கையின் இலக்கோ அது வெளியே இல்லை" அது உனக்குள்ளேயே தான் இருக்கிறது.

பிறந்த நாள்



பிரசஞ்சிதா என்ற மன்னன் புத்தரைத் தரிசிக்க வந்தான். புத்தரிடம் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தான். யாரும் இடையூறு செய்யாமல் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பிட்சு மட்டும் குறுக் கிட்டார். இருவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, புத்தரின் காலைத் தொட்டு வணங்க அனுமதி கேட்டார். மாலைக்குள் அவர் அவசரமாக, பிரச்சாரத்திற் காகப் புறப்பட வேண்டி யிருந்தது.

பிட்சு மன்னரிடம், "மன்னிக்க வேண்டும், குறுக்கிடுவதற்காக. ஒரு கணம். இவர் காலைத் தொட்டு வணங்கி விட்டுப் புறப்பட்டு விடுகிறேன். அந்திப் பொழுதிற்குள் பயணம் தொடங்க வேண்டியிருக்கிறது," என்று கூறி விட்டு, அந்த எழுபத்தைந்து வயது பிட்சு புத்தரின் காலைத் தொட்டு வணங்கினார்.

"பான்டே, உமக்கு என்ன வயதாகிறது?" என்று கேட்டார். 'பான்டே' என்பது மரியாதைக்குரிய பிட்சுக்களைக் குறிப்பது.

"கிழபிட்சு "சொல்வதற்கு வெட் கமாக இருக்கிறது. எனக்கு நான்கு வயது தான்," என்றார்!

மன்னன் திகைப்படைந்தான்! எழுபது வயது மதிக்கத் தக்க சன்னி யாசிக்கு நான்கு வயதா? அது எப்படி?

ஆனால், புத்தர் அந்தப் பதிலை சாதா ரணமாக ஏற்றுக் கொண்டார். அது, அந்த மன்னனுக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது! "என்ன இது! இவருக்கு நான்கு வயதா?" என்று கேட்டான் மன்னன்.

"உங்களுக்குத் தெரியவில்லை போலிருக்கிறது. நாங்கள் வயதை வேறு விதமாகக் கணக்கிடுவது வழக்கம். ஆழ்ந்த தியானத்தால், ஒருவருடைய மையத்திலிருந்து பிறக்கும் ஒளி வெளியே பரவவில்லை யென்றால், அவர் பிறக்கவே இல்லை என்று பொருள்.

இந்த பிட்சு, தம்மை முதன் முதலாகக் கொஞ்சமாய் அடையாளம் கண்டு கொண்ட நிகழ்ச்சி நான்கு

ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. அவருடைய எழுபத்தி யோரு ஆண்டு வாழ்வும் வெறும் உறக்கமாய் உதறித் தள்ளப்பட்டது. அவை, வாழ்நாளின் வயதாகக் கணக்கிடப்படவில்லை," என்றார் புத்தர்.

மன்னர் வியப்படைந்தார். புத்தரின் திருவடிகளைத் தொட்டு வணங்கி விட்டு, "நான் மீண்டும் பிறக்க அருள் செய்யுங்கள். இது நாள்வரை நான், உயிரோடு இருந்ததாக நினைத்துக் கொண்டிருந்த தேன். நான் உயிரற்ற பிணம் என்பதை நீங்கள் தாம் உணர்த் தினீர்கள்," என்றார் மன்னர்.

"நான் இறந்தவன் என்று உணர்ந்த இந்த உணர்வே பெரிய ஆரம்பம் தான்," உனக்கு இன்று பிறந்தநாள் என்றார் புத்தர்.

நான் தொடர்ந்து தியானத்தை உபதேசித்து வருகிறேன். நீங்களும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். காரியம் ஆரம்பிக்க இது நல்ல நேரம். சும்மா கேட்டுக்கொண்டிருந்தால் பய னில்லை. உங்களை நீங்கள் யாரென உணரும் நாளே உங்கள் பிறந்த நாள்.

கவுதம புத்தரின் கம்யூனில் மட்டும் தான், ஒருவர் தம் உள் மையத்தைத் தொடும் நாளிலிருந்து வயது கணக்கிடப்பட்டது.

மற்றபடி, நடப்பது, அலைவது, மட்டமான காரியங்கள் செய்வது, போர்களை உருவாக்குவது, ஹிரோசிமா, நாகசாகி போன்ற அழகிய நகரங்களை அடியோடு அழிப்பது போன்ற காரியங் களைச் செய்வதெல்லாம், பிணங்களின் வேலைகளே!

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் கற்பிக்கப்படும் வரலாறெல்லாம், வாழும் மனிதரின் வரலாறு அன்று. அது பிணங்களின் வரலாறு. உயிரோடு வாழ்பவர் மிகச் சிலரே. அவர்களின் வரலாற்றை எழுதினால், எல்லாக் குழந்தைகளும் மகிழ்ச்சியடையும்.

நாம் உலகாயத விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத் துக் கொடுத்து, வாழ்வின் மதிப்பீட் டையே இழந்து விட்டோம். கேலிக்குரியவர் களாக ஆகிவிட்டாம். ஆனால், நாம் எல்லாரும் ஒரே படகில் தான் பயணம் செய்கிறோம். யாருமே அதை ஞாபகப்படுத்துவதில்லை.

இதய மௌனத்தை உணராதவன், பிரபஞ்சத்தில் கலந்து கரைவதை அறியாதவன், பிறவி எடுத்த மனி தனே அல்ல.அவன் இருந்தாலும், மூச்சு விட்டாலும், நடந்தாலும், அவன் தூக்க வியாதியில் நடமாடுகின்றவனே! அவன் மரணமும் கூட அப்படித் தான்!

என்றுமே வாழாதவர்கள் கூட சாகிறார்கள் என்பது ஆச்சரியம் தானே! வாழ்க்கைக்கு அழுத்தமான மையமும், ஆழமான கவனமும் தேவைப்படுகிறது.

இந்தப் பூமிக்கிரகத்தின் மீது பிறந்த கோடான கோடிப் பேரில் உண்மையாக வாழ்ந்தவர்கள் மிகச் சிலரே என்கிறார் ஓஷோ.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திரு. ஓலைச்சுவடி தினகரன். சென்னை. ரூ.2000.
திருமதி.சாந்தா. மூலக்கடை.ரூ.1150.
திருமதி.ஹேமரம்யா. கோவை. ரூ.1000.
திரு.R.முனுசாமிமேஸ்திரி, பச்சையம்மாள்,சென்னை.ரூ.1000
திரு. முரளி சாய்ராம். திருநின்றவூர். ரூ.500.
திரு.கேஸ்வர்.ஈ.ரோடு. ரூ.500.
திருமதி. நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.500.

திரு.சுபத்ரா, மயிலாப்பூர்.ரூ.500.
திரு.நீலநாராயணன். திருப்பனந்தாள். ரூ. 500.
திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500.
திருமதி.சுமதி வாழ்க வளமுடன். கொளத்தூர். ரூ.500.
திருமதி.ஜானகி கண்ணன். அயனாவரம்.ரூ.500.
திருமதி. பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.400.
திருமதி.எஸ்.ரங்கநாயகி.நாகை. ரூ.200
திரு. ஐஸ்வர்யா. டி.நகர். ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர் டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திரு. விஜயன் சி.சி.பேங்க் மேலாளர். ரூ.200.
திரு. பி.ராஜேந்திரன். மேற்கு மாம்பலம்.ரூ.101
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு.கணேஷ் கபே. வில்லிவாக்கம். ரூ.100
திரு.ராஜசேகர் சுமதி. கொளத்தூர். ரூ.100.
திரு. ஆர்யா குடும்பத்தார். கோவை. ரூ.100
திருமதி.பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100
திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
திருநீர்மலை. அரிசி 25 கி
திருமதி.ஹேமா வைத்தியநாதன் குடும்பத்தார், குரோம்பேட்டை ரூ.201.



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திருமதி.ரேவதி.கோவை.ரூ.1500.
திரு. டி.கோவிந்தராஜூ. வேளச்சேரி.ரூ.500.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068